بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ   نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ   وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡد

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 3

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 19

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

23 ஷஃபான் 1439 ஹிஜ்ரி கமரி   10 ஹிஜ்ரத் 1397 ஹிஜ்ரி ஷம்ஸி

10 மே 2018

### அல்லாஹ்வின் கட்டளை

يٰۤاَيُّهَا الَّذِيۡنَ اٰمَنُوۡا
كُتِبَ عَلَيۡكُمُ الصِّيَامُ
كَمَا كُتِبَ عَلَى الَّذِيۡنَ مِنۡ قَبۡلِكُمۡ
لَعَلَّكُمۡ تَتَّقُوۡنَۙ

நம்பிக்கை கொண்டவர்களே! உங்கள் முன்னோருக்கு நோன்பு கடமையாக்கப்பட்டது போன்று, உங்களுக்கும் அது கடமையாக்கப்பட்டுள்ளது. இதனால் நீங்கள் இறையச்சமுள்ளவர் ஆகலாம்.

(அதிகாரம் அல் பக்கரா : 184)

### அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**ஸய்யிதுனா ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இவ்வாறு கூறினார்கள். 'நூஹ் நபியின் கப்பல்' என்ற நூலில் உள்ள 'நமது போதனை' என்ற பகுதியை ஒவ்வோர் அஹ்மதியும் கண்டிப்பாகப் படிக்க வேண்டும். இன்னும் சொல்வதென்றால், 'நூஹ் நபியின் கப்பல்' என்ற நூலை முழுமையாகப் படிக்க வேண்டும். நான் இறைவனால் அனுப்பட்டவன் என்பதற்கு இது ஓர் அடையாளமாகும். அதாவது, எனது வீட்டின் நான்கு சுவர்களுக்கிடையே இருக்கும் நல்லவர்கள் இந்த நோயினால் மரணிப்பதிலிருந்து காப்பாற்றப்படுவார்கள். மேலும் எனது இயக்கத்திலுள்ள அனைவரும் ஒப்பாய்வில் மற்றவர்களை விட அதிகமாக பிளேக்கின் தாக்குதல்களிலிருந்து தப்பித்துக் கொள்வார்கள். இவர்களிடம் காணப்படும் சாந்தியும் சமாதானமும் மற்ற எந்தக் கூட்டத்திலும் இருக்காது.**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

நான் அகப்பார்வையுடன் கூறுகிறேன். வல்லமையுள்ள இறைவனின் வாக்குறுதிகள் உண்மையானவையாகும். மேலும், இனி வரவிருக்கும் அந்த நாட்கள் வந்து சேர்ந்து விட்டதாக நான் பார்க்கிறேன். எவ்விதத்திலாவது பிளேக் நோயிலிருந்து மக்கள் காப்பாற்றப்பட வேண்டும் என்பதே நமது உயர்ந்த அரசின் உண்மையான குறிக்கோள் என்றும், இனி ஏதாவது சமயத்தில் பிளேக்கிலிருந்து இரட்சிப்புப் பெற தடுப்பூசியை விட மேலான வேறு திட்டம் காணப்படுமானால் அதனையே அது மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ளும் என்றும் நான் அறிவேன். ஆகவே, இந்நிலையில் என்னை இறைவன் நடத்திச் சென்ற இவ்வழியானது இவ்வுயர்ந்த அரசின் குறிக்கோளுக்கு மாறானதன்று என்பது வெளிப்படையாகும். மேலும், இன்றிலிருந்து இருபது ஆண்டுகளுக்கு முன்பு இம்மாபெரும் அழிவை விளைவிக்கக்கூடிய பிளேக்கைப் பற்றிய இச்செய்தி 'பராஹீனே அஹ்மதிய்யா' எனும் எனது நூலில் முன்னறிவிப்பாக இடம் பெற்றிருக்கிறது. மேலும், இந்த இயக்கத்திற்கு கிடைக்க இருக்கும் சிறப்பான அருள்களைப் பற்றிய வாக்குறுதிகளும் இடம் பெற்றிருக்கின்றன.

இதுமட்டுமல்லாமல் இறைவனுக்கும் அவனால் அனுப்பப்பட்ட -வருக்கும் முன்னால் தற்பெருமை கொள்ளமல் எனது வீட்டை சூழ்ந்திருக்கும் நல்லவர்களை நாசத்தை விளைவிக்கக் கூடிய பிளேக்கிலிருந்து காப்பாற்றி அவன் இரட்சிப்பு அளிப்பான். அத்துடன் மற்றவர்களை விட அதிகமாக இந்த இயக்கத்தின் மீது இறைவனது சிறப்பான கருணை இருந்து வரும் என்றும் இறைவனிடமிருந்து உறுதியான முன்னறிவிப்பு கிடைத்துள்ளது. இருந்தபோதிலும் ஒருவருடைய நம்பிக்கையில் பலவீனமோ, நடைமுறையில் குறைபாடோ, முன்பே விதியில் நிர்ணயிக்கப்பட்ட மரணமோ அல்லது இறைவன் அறிவில் வேறு ஏதாவது காரணமோ இருக்குமானால் அவற்றால் அரிதாக ஏதாவது சம்பவம் இந்த ஜமாஅத்தில் நிகழலாம். ஆகவே அரிதாக என்பது அறவே இல்லை என்ற நியதிக்குட்பட்டதாகும். எப்போதும் ஒப்பாய்வின்போது பெரும்பான்மையே கவனத்தில் கொள்ளப்படுகிறது.

பிளேக் வியாதிக்காக தடுப்பூசி போடக் கூடியவர்கள் மற்றவர்களை விட மிகக் குறைவாகவே மரணம் அடைகிறார்கள் என்பதை அரசு தனது அனுபவத்தின் மூலம் நன்கு அறிந்திருக்கிறது. ஆகவே, அரிதான மரணம் தடுப்பூசியின் மதிப்பை குறைத்து விட முடியாததைப் போன்றே காதியானில் மற்றவர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது மிகவும் குறைந்த அளவில் பிளேக் நோய் சம்பவங்கள் ஏற்பட்டாலோ மிக அரிதாக இந்த ஜமாஅத்திலிருந்து யாராவது இந்த நோயால் மரணமடைந்தாலோ அதனால் இந்த அடையாளத்தை பற்றிய மதிப்பு எவ்வகையிலும் குறைந்து விடாது. இறைவனது பரிசுத்த கூற்றிலிருந்து வெளியாகும் சொற்களைப் பின்பற்றியே இந்த முன்னறிவிப்பு எழுதப்பட்டிருக்கிறது. இறை வெளிப்பாடு வெளியான தொடக்கத்திலேயே அதைப் பற்றி நகைப்பது அறிவாளிகளின் செயல் அன்று. இது இறைவனின் கூற்றாகும். எந்த ஒரு சோதிடனின் கூற்றும் அன்று. இது ஒளியின் பார்வையிலிருந்து வெளியானதாகும். இருளில் இருந்து கொண்டு அனுமானமாய் வெளிப்படும் வெற்று வார்த்தை அல்ல. இது பிளேக்கை இறக்கியவனும் அதனை அகற்றக் கூடியவனுமாகிய இறைவனின் கூற்றாகும்.

நான் இறைவனால் அனுப்பப்பட்டவன் என்பதற்கு இது ஓர் அடையாளம் ஆகும். அதாவது எனது வீட்டின் நான்கு சுவர்களுக்கிடையே இருக்கும் நல்லவர்கள் இந்த நோயினால் மரணிப்பதிலிருந்து காப்பாற்றப்படுவார்கள். மேலும், எனது இயக்கத்திலுள்ள அனைவரும் ஒப்பாய்வில் மற்றவர்களை விட அதிகமாக பிளேக்கின் தாக்குதலிலிருந்து தப்பித்துக் கொள்வார்கள். இவர்களிடம்

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

சுதந்திரமான முறையில் எங்களை நாங்களே எங்களது ஈமானுக்கு ஏற்ப முஸ்லிம்கள் என்று கூற முடிகின்ற அளவில் அஹ்மதிகளின் நிலைமை பாகிஸ்தானில் இல்லை. அல்லது எங்களால் இறைவணக்கத்தில் ஈடுபட முடியவில்லை. அல்லது மார்க்க கடமைகளை நிறைவேற்ற முடியவில்லை என்ற காரணத்தை அவர்கள் கூறுகின்றனர். மதத்தின் பெயரால் பாகிஸ்தானில் நம்மீது இழைக்கப்படுகின்ற அநீதிகளை எடுத்துக் கூறுவதுடன் அத்தகைய நிலைமைகளில் நான் அங்கு இருப்பது மனதளவில் என்னை கடுமையான அழுத்தத்தின் கீழ் கொண்டு வந்து விடுகின்றது. நிரந்தரமான Torchure இருந்து வருகின்றது என்று மட்டும் நீங்கள் கூறினால், பொதுவாக இங்குள்ள அரசின் நிர்வாகம் அல்லது நீதிமன்றத்தின் நீதிபதிகள் இந்த விஷயத்தைப் புரிந்து கொள்கின்றனர். உதவி செய்கின்ற மற்றும் அனுதாபத்துடன் நடந்து கொள்கின்ற நிலை அவர்களிடம் ஏற்படுகின்றது. எனவே, மற்றவர்கள் கூறுவதைக் கேட்டு அல்லது வழக்கறிஞர்கள் கூறுவதைக் கேட்டு வழக்கின்போது தமது விஷயத்தை மிகைப்படுத்திக் கூற வேண்டிய தேவை நமக்கில்லை.

---

நமது மார்க்கத்தில் நிலைத்திருப்பதற்காக நமது நாட்டிலிருந்து வெளியேறியிருக்கும்போது பிறகு அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு எல்லாவற்றையும் விட அதிகமாக முன்னுரிமையை நாம் வழங்க வேண்டும். உலகத்தைப் பெறுவதும் உலகப் பொலிவுகளில் மூழ்குவதும் நமது நோக்கம் அல்ல என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். மேலும், இது நம்பிக்கை கொண்டவரது பிறப்பின் நோக்கமும் அல்ல.

எங்கெல்லாம் அஹ்மதிகள் இருக்கின்றனரோ அவர்கள் தமது சுற்றுச்சூழலில் இருப்பவர்களுக்கு இதனை கூற வேண்டும். அதாவது உண்மையான இஸ்லாம் என்றால் என்ன? என்பதை கூற வேண்டும். ஒவ்வோர் அஹ்மதியின் செயல், அவரது நல்லொழுக்கம், அவரது இறைவணக்கத்தின் தரம் ஆகியவை மற்றவர்களின் கவனத்தை தமது பக்கம் ஈர்க்கக் கூடியதாக இருக்க வேண்டும். இது எங்கு அஹ்மதிகளை மற்றவர்களை விட தனிச்சிறப்புமிக்கவர்களாக ஆக்கி விடுமோ அங்கு அத்துடன் இங்குள்ள உள்ளூர் மக்களுக்கு தப்லீக் செய்வதற்கான வழியைத் திறப்பதற்கும் உதவி செய்யக் கூடியதாக அது இருக்கும்.

உலகம் எந்த அழிவின் பக்கம் முன்னேறிச் சென்று கொண்டிருக்கின்றதோ அதற்கான அசல் காரணம் அதாவது, மேற்கத்திய உலகின் முன்னேற்றம் அழிவிலிருந்து அவர்களை காப்பாற்றி விடும் என்று அவர்கள் கருதுகின்றனர். மேலும், இழப்பு ஏற்பட்டாலும் கூட அதை நாம் நிவர்த்தி செய்து விடலாம் என்று அவர்கள் கருதுகின்றனர். இவ்வாறு சிந்திப்பதும் கூட அவர்களின் தவறான எண்ணமாக இருக்கின்றது.

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **ஸ்பெயினின் வெலின்சியாவிலுள்ள பைத்துர் ரஹ்மான் பள்ளிவாயிலில் 6 ஏப்ரல் 2018** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1397 -ஆம் ஆண்டு **ஷஹாதத்** மாதம் **6 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِينَ. الرَّحْمٰنِ الرَّحِيمِ. مٰلِكِ يَوْمِ الدِّينِ. إِيَّاكَ نَعْبُدُ
وَ إِيَّاكَ نَسْتَعِينُ. اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ. صِرَاطَ الَّذِينَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّالِّينَ.

ஸ்பெயின் மேற்கத்திய நாடுகளில் ஒரு நாடாக இருக்கின்றது என்பதில் சந்தேகமில்லை. ஆனால், உறுதியான வாழ்வாதரத்தின் அடிப்படையில் பார்க்கும்போது இவ்விஷயத்தில் ஐரோப்பாவிலுள்ள நாடுகளில் குறைந்த உறுதித் தன்மையை உடைய நாடாக அது இருக்கின்றது. பணி செய்வதற்கான சந்தர்ப்பம், வருமானம் மற்றும் வாழ்க்கைத் தரம் ஆகியவற்றில் ஐரோப்பாவிலுள்ள மற்ற நாடுகள் உதாரணமாக ஃபிரான்ஸ், ஜெர்மனி, ஹாலாந்து அல்லது யூ.கே போன்ற நாடுகளை விட அது குறைந்த தரத்தில் இருக்கின்றது என்றே பொதுவாக கூறப்படுகின்றது. ஆனால், அவ்வாறிருந்தும் கூட பாகிஸ்தானுக்கு எதிரில் இங்குள்ள பொருளாதார நிலைமை, பாகிஸ்தானிலிருந்து இங்கு வருபவர்களுக்கு சிறந்ததாக இருக்கின்றது. இதன் காரணமாக பல பாகிஸ்தானியர்களும் தங்களது வியாபாரம் தொடர்பாகவும் வேலை நிமித்தமாகவும் இங்கு வருகின்றனர்.

அஹ்மதிகளைப் பொருத்தவரையில் பாகிஸ்தானிலிருந்து வெளியேறுபவர்கள் இரண்டு காரணங்களுக்காக அங்கிருந்து வெளியேறு –கின்றனர். அதில் மிகப்பெரும் காரணம், அஹ்மதிகளுக்கு மார்க்கத்தைப் பேண முடியாத அளவிலுள்ள அடக்குமுறைகள் அங்கு இருப்பதும், அவர்கள் சுதந்திரமாக இருக்க முடியாத நிலை அங்கு இருப்பதும் ஆகும். இரண்டாவது காரணம், அவர்களது பொருளாதார நிலைமையில் அவர்கள் சிறந்து விளங்க வேண்டும் என்பதாகும். இங்கு வருபவர்களில் பெரும்பாலார் இந்த காரணங்களைக் கூறியே இங்கு Assylum –ஐப் பெறுகின்றனர். (அகதிகளாக இங்கு இருப்பதற்கான உரிமையைப் பெறுகின்றனர்.) அல்லது அவர்கள் நிரந்தரமாக இங்கு தங்குவதற்கான விசாவைப் பெறுவதற்கு முயற்சி செய்கின்றனர். சுதந்திரமான முறையில் எங்களை நாங்களே எங்களது ஈமானுக்கு ஏற்ப முஸ்லிம்கள் என்று கூற முடிகின்ற அளவில் அஹ்மதிகளின் நிலைமை பாகிஸ்தானில் இல்லை. அல்லது எங்களால் இறைவணக்கத்தில் ஈடுபட முடியவில்லை. அல்லது மார்க்க கடமைகளை நிறைவேற்ற முடியவில்லை என்ற காரணத்தை அவர்கள் கூறுகின்றனர். வழக்கின்போது சில மக்கள் சரியான முறையில் தமது நிலைமைகளை இங்கு எடுத்துக் கூறுகின்றனர். மேற்கத்திய நாடுகளில் சிலர் இவ்விஷயத்தில் பொய்யான வாக்குமூலத்தையும் கொடுக்கின்றனர். இங்கு இவ்விஷயம் குறைவாக இருக்கின்றது. ஐரோப்பாவின் ஏனைய நாடுகளில் இவ்விஷயம் அதிகமாக காணப்படுகின்றது. ஆனால், இதற்கான அவசியமே இல்லை. நான் பலமுறை எடுத்துக் கூறியுள்ளேன். உண்மையான விஷயத்தைக் கூறுவதும், மதத்தின் பெயரால் பாகிஸ்தானில் நம்மீது இழைக்கப்படுகின்ற அநீதிகளை எடுத்துக் கூறுவதுடன் அத்தகைய நிலைமைகளில் நான் அங்கு இருப்பது மனதளவில் என்னை கடுமையான அழுத்தத்தின் கீழ் கொண்டு வந்து விடுகின்றது. நிரந்தரமான Torchure இருந்து வருகின்றது என்று மட்டும் நீங்கள் கூறினால், பொதுவாக இங்குள்ள அரசின் நிர்வாகம் அல்லது நீதிமன்றத்தின் நீதிபதிகள் இந்த விஷயத்தைப் புரிந்து கொள்கின்றனர். உதவி செய்கின்ற மற்றும் அனுதாபத்துடன் நடந்து கொள்கின்ற நிலை அவர்களிடம் ஏற்படுகின்றது. எனவே, மற்றவர்கள் கூறுவதைக் கேட்டு அல்லது வழக்கறிஞர்கள் கூறுவதைக் கேட்டு வழக்கின் போது தமது விஷயத்தை மிகைப்படுத்திக் கூற வேண்டிய தேவை நமக்கில்லை. இவ்வாறே ஆரம்பத்திலிருந்து இறுதி வரை நாம் கூறுகின்ற வாக்குமூலம் ஒன்றுபோல் இருக்க வேண்டும். வாக்குமூலத்தை நாம் மாற்றக் கூடாது. அதனால் நிர்வாகத்திற்கு பொய் கூறப்படுகின்றது என்ற சந்தேகம் எழக் கூடாது.

எந்நிலையிலும் பொய்யிலிருந்து ஓர் அஹ்மதி தவிர்ந்திருக்க வேண்டும். அல்லாஹ் பொய் கூறுவததை இறைவனுக்கு இணை வைக்கின்ற செயலுக்கு சமமானதாக கூறுகின்றான். ஓர் அஹ்மதி இறைவனுக்கு இணை வைப்பவராக இருப்பார் என்று ஒருபோதும் நாம் எதிர்பார்க்க முடியாது. ஒருபுறம் எல்லாரையும் விட அதிகமாக நான் இறைவனின் ஏகத்துவத்தை ஏற்றுக் கொள்பவனாக இருக்கின்றேன். பெருமானார் (ஸல்) அவர்களின் அடியானாக நான் இருக்கின்றேன்.

காலத்தின் இமாமான வாக்களிக்கப்பட்ட மஸீஹையும் மஹ்தியையும் நான் ஏற்றுக் கொண்டுள்ளேன் என்பது அவரது வாதமாக இருக்கின்றது. மறுபுறம் எந்த அடிப்படையான பாவத்திலிருந்து தவிர்ந்திருப்பது ஓர் ஏகத்துவ –வாதியின் முதல் கடமையாக இருக்கின்றதோ அதிலிருந்து மனிதன் தவிர்ந்து கொள்வதில்லை.

எனவே, இதன் அடிப்படையில் ஒவ்வோர் அஹ்மதியும் தன்னை ஆய்வு செய்வது பார்க்க வேண்டும். உலகப் பலன்களைப் பெறுவதற்காக இறைவனின் பார்வையில் மிகவும் பாவியாக நம்மை ஆக்குகின்ற அத்தகைய எந்தவொரு செயலையும் நாம் செய்திருக்கின்றோமா என்று அவர் ஆய்வு செய்ய வேண்டும். எனவே, ஏற்கனவே நான் கூறியது போன்று நாம் நமது ஈமானை பாதுகாத்துக் கொள்வதற்காக, நமது மார்க்கத்தில் நிலைத்திருப்பதற்காக நமது நாட்டிலிருந்து வெளியேறியிருக்கும்போது பிறகு அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு எல்லாவற்றையும் விட அதிகமாக முன்னுரிமையை நாம் வழங்க வேண்டும். அஹ்மதிய்யத் அதாவது, உண்மை இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பிறகு நாம் எவற்றிற்கு முன்னுரிமை வழங்குகின்றோம்? எவற்றிற்கு நாம் முன்னுரிமை வழங்க வேண்டும்? என்று நாம் பார்க்க வேண்டும். எவற்றிற்கு நாம் முன்னுரிமை வழங்குகின்றோமோ அவை இறைவனின் கட்டளைகளுக்கு ஏற்ப இல்லை என்றால் நாம் நமது நோக்கத்தை அடையவில்லை என்பதே அதன் பொருளாகும். நமது முன்னுரிமைகள் இறை கட்டளைகளுக்கு ஏற்ப அமைந்திருந்தால் பிறகு நாம் இந்த ஹிஜ்ரத்தின் நோக்கத்தை அடைந்து விட்டோம் என்பதே அதன் பொருளாகும். இந்நிலையில் இறைவனின் அருளும் நம்முடன் இருக்கும். நமது அடிப்படையே பொய்யின் மீது இருக்குமென்றால், உலகைப் பெறுவதை நாம் நமது குறிக்கோளாக புரிந்து கொண்டிருந்தால், பிறகு நாம் அல்லாஹ்வின் அருள்களுக்கு வாரிசாக முடியாது. அல்லாஹ் ஏகனாக இருக்கின்றான் என்பதை ஏற்றுக் கொள்பவரால் அல்லாஹ்வை வணங்குபவரால் ஒருபோதும் அவனுக்கு இணை வைக்க முடியாது. எந்த மக்கள் தமது படைப்பின் நோக்கத்தைப் உண்மையை புரிந்து கொண்டனரோ அவர்களது வாழ்க்கையின் முதல் நோக்கம் இறைவனின் திருப்தியைப் பெறுவதாகும். உலகத்தைப் பெறுவதும் உலகப் பொலிவுகளில் மூழ்குவதும் நமது நோக்கம் அல்ல என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். மேலும், இது நம்பிக்கை கொண்டவரது பிறப்பின் நோக்கமும் அல்ல. இறைவனை திருப்திப்படுத்துவதற்காக அவன் கூறியுள்ள நமது பிறப்பின் நோக்கத்தைப் பெறுவதற்கு நாம் முயற்சி செய்தால்தான் உண்மையான வெற்றியை நாம் பெற முடியும். மேலும், இந்த உலகிற்கு வந்ததன் நோக்கத்தை நிறைவேற்ற முடியும். இந்த உலகமும் அதன் அருள்களும் நமக்கு கிடைக்கத்தான் செய்யும். தன் பக்கம் வருபவர்களை மார்க்க மற்றும் உலக அருள்களிலிருந்து அல்லாஹ் விலக்கி வைப்பதில்லை. அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்கு முயற்சி செய்பவர்களை உலக அருட்கொடைகளைப் பெறுவதிலிருந்து அல்லாஹ் விலக்கி வைப்பதில்லை. மாறாக, அல்லாஹ் நமக்கு இதற்கான துஆவை கற்றுத் தந்துள்ளான். மேலும் என்னிடம் உலகம் மற்றும் மறுமையின் நன்மையை வேண்டுங்கள் என்று அவன் கூறியுள்ளான். رَبَّنَآ اٰتِنَا فِي الدُّنْيَا حَسَنَةً وَّفِي الْاٰخِرَةِ حَسَنَةً وَّقِنَا عَذَابَ النَّارِ (2:202) என்ற துஆவை அவன் நமக்கு கற்றுத் தந்துள்ளான்.

இது தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: ‘‘மனிதன் தனது ஆன்மாவை நல்ல நிலையில் வைத்திருப்பதற்கு இரண்டு விஷயங்களின் தேவையை உடையவனாக இருக்கின்றான். ஒன்று, இந்த உலகின் குறுகிய கால வாழ்க்கை. இதில் என்ன துன்பங்கள், கஷ்டங்கள் மற்றும் சோதனைகள் வருகின்றனவோ அவற்றிலிருந்து அவன் பாதுகாப்பாக இருக்க வேண்டும். இரண்டாவது விஷயம், இறைவனிடமிருந்து அவனை தொலைவில் கொண்டு செல்கின்ற குழப்பம், தீமைகள் மற்றும் ஆன்மீக நோய்களில் இருந்து அவன் இரட்சிப்பைப் பெற வேண்டும்.’’

மனிதனுக்கு இரண்டு விஷயங்களைப் பார்க்க வேண்டியது இருக்கின்றது. ஒன்று, உலகத் துன்பங்கள் மற்றும் நோய்கள்; மற்றொன்று, ஆன்மீக துன்பங்கள் மற்றும் நோய்கள். இந்த இரண்டிலிருந்தும் இரட்சிப்பைப் பெறுவதற்கு மனிதன் முயற்சி செய்கின்றான்.

அன்னார் கூறுகின்றார்கள்: ‘‘உலகின் நன்மைகள் என்பது பௌதீகமான முறையிலும் ஆன்மீகமான முறையிலும் ஒவ்வொரு துன்பம், மோசமான வாழ்க்கை மற்றும் இழிவிலிருந்து மனிதன் பாதுகாப்பாக இருப்பதாகும்.’’

(மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 302; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

இந்த துஆவில் வருகின்ற ரப்பனா (எங்கள் இறைவா!) என்பதற்கு மேலும் விளக்கம் அளித்தவாறு ஹுஸூர் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள். ‘‘உண்மையில் ‘ரப்பனா’ என்ற சொல்லில் தவ்பாவின் பக்கம் நுட்பமாக சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றது’’ மனிதன் ‘ரப்பனா’ – எங்கள் இறைவா! என்று கூறும்போது முழுமையான முறையில் அவன் அல்லாஹ்வின் பக்கம் குனிகின்றான். ஏனென்றால், ‘ரப்பனா’ – எங்கள் இறைவா! என்ற சொல் அவன் இதற்கு முன்னர் உருவாக்கி வைத்திருந்த பல ‘ரப்’ –களிடமிருந்தும் விலகி இந்த இறைவனின் பக்கம் அவன் வர வேண்டும் என்பதை வேண்டுகின்றது. மேலும் இந்த சொல் உண்மையான வேதனையும் உருக்கமும் இல்லாமல் உள்ளத்திலிருந்து வெளி வர முடியாது.

உண்மையான முறையில் ‘ரப்பனா’ என்று மனிதன் கூறும்போது பிறகு ஒரு வேதனையுடன் அந்த சொல் வெளி வருகின்றது. வெளிப்படையாக மட்டும் ‘ரப்பனா’ என்று கூறுகின்ற மக்களும் இருக்கின்றனர். ஆனால் உண்மையாக அதை கூறுபவரது உள்ளத்தின் நிலைமை இவ்வாறானதாக இருக்கும். ஆனால், உள்ளத்தின் இந்த நிலைமையுடன் மனிதன் துஆ செய்யும்போதுதான் உண்மையான முறையில் ‘ரப்பனா’ என்ற சொல் அவனது நாவிலிருந்து வெளி வருகின்றது. மேலும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கூற்றிற்கு ஏற்ப உண்மையான வேதனை இல்லாமல், உருக்கம் இல்லாமல் ‘ரப்பனா’ என்ற சொல் நாவிலிருந்து வெளி வரவே முடியாது.

அன்னார் கூறுகின்றார்கள்: உண்மையில் மனிதன் பல ‘ரப்’ –களை உருவாக்கி வைத்திருக் –கின்றான். தனது தந்திரம் மற்றும் ஏமாற்று வேலைகள் மீது அவனுக்கு முழுமையான நம்பிக்கை இருக்கின்றது. அவையே அவனது இறைவனாக இருக்கின்றன. தனது அறிவு மற்றும் உடல் ஆற்றல் காரணமாக அவனுக்கு ஆணவம் இருந்தால் அவையே அவனது இறைவனாக இருக்கின்றன. அவனுக்கு அவனது அழகு, பொருள் மற்றும் செல்வம் ஆகியவற்றின் மீது பெருமை இருந்தால் அவையே அவனது இறைவனாக இருக்கின்றன. சுருக்கமாக இது போன்ற ஆயிரக்கணக்கான காரணிகள் அவனுடன் இணைந்திருக்கின்றன. எதுவரை அவற்றையெல்லாம் விட்டு விட்டு அவற்றிலிருந்து விலகி அந்த ஏகனாக இணையற்ற உண்மையான இறைவன் முன்னால் பணிவுடன் அவன் தனது தலையை குனிய வைப்பதில்லையோ வேதனை நிறைந்துள்ள உள்ளத்தை உருக்கக்கூடிய ‘ரப்பனா’ என்ற குரலுடன் அவனது சந்நிதியில் அவன் விழவில்லையோ அதுவரை அவன் உண்மையான இறைவனை புரிந்து கொள்ளவில்லை.

நான் ஏற்கனவே கூறியதுபோன்று மக்கள் ‘ரப்பனா’ என்று கூறி இந்த துஆவை ஓதுகின்றனர். ஆனால் வேதனை நிறைந்த உள்ளத்தை உருக்கக்கூடிய குரலுடன் அதை கூறும்போதுதான் உண்மையான ‘ரப்பனா’ வாக அது இருக்கின்றது என்று அன்னார் கூறுகின்றார்கள். ‘ரப்பனா’ என்று நான் கூறும்போது நான் ஏகனான இணையற்ற ஓர் இறைவனை அழைக்கின்றேன். அவனே எனது இறைவனாவான் என்ற உண்மையை அவர் அறிந்திருக்க வேண்டும். அப்போதுதான் உண்மையான இறைவனை அவர் புரிந்து கொள்கின்றார். மேலும் அவனிடமே அவன் துஆ கேட்கின்றான் என்று அன்னார் கூறுகின்றார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: ‘‘உள்ளம் உருகுகின்ற உயிரையும் உருக வைக்கின்ற அத்தகைய நிலையில் அவன் முன்னிலையில் தனது பாவங்களை ஏற்றுக் கொண்டவாறு தவ்பா செய்தவாறு மனிதன் ‘ரப்பனா’ அதாவது உண்மையான இறைவனாக நீதான் இருந்தாய். ஆனால், நாங்கள் எங்களது தவறின் காரணமாக வேறு இடங்களுக்கு வழிதவறிச் சென்று திரிந்து கொண்டிருந்தோம். இப்போது நான் அந்த பொய்யான சிலைகளையும் பொய்க்கடவுள் –களையும் விட்டு விட்டேன். உண்மையான உள்ளத்துடன் உனது ‘ருபூபிய்யத்’ அதாவது, உனது படைத்து வளர்த்து காத்தோம்புகின்ற

பண்பை நான் ஏற்றுக் கொள்கின்றேன். உனது சந்நிதியில் வருகின்றேன் என்று இறைவனை நோக்கி அவன் கூறுகின்றான்.”

(மல்.ஃபூஸாத் தொகுதி 5 பக்கம் 188-189; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

கலப்பற்ற தன்மையுடன் இறைவன் முன்னால் குனிந்து அவனை வணங்கி தமது படைப்பின நோக்கத்தை புரிந்து கொள்கின்ற இத்தகைய நிலையைத்தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம்மிடம் பார்க்க விரும்புகின்றார்கள். உரிமையை செலுத்தும்போது நமக்கு உலகின் நன்மைகளும் கிடைக்கும். மறுமையின் நன்மைகளும் கிடைக்கும். இன்னும் சொல்வதென்றால், உலகின் நன்மைகளைக்கூட மனிதன் மறுமையின் நன்மைகளைப் பெற வேண்டும் என்பதற்காகவே கேட்கின்றான். அதன் மூலம் உடல்நலம் அவனுக்கு இருக்கும்போது அல்லாஹ்வை வணங்குவதற்கான உரிமையையும் அவனால் செலுத்த முடியும்.

உடல் நலம் ஓர் உலக நற்பேறும் நன்மையும் ஆகும். ‘ஹஸனாத்’ – நன்மைகள் என்பதில் அதுவும் அடங்கும். உடல் நலம் இருந்தால் இறைவணக்கத்தையும் சரியான முறையில் மனிதனால் நிறைவேற்ற முடியும். பொருள் இருந்தால் அதை இறைவழியில் தியாகம் செய்தவாறு மார்க்கத்திற்காக தியாகம் செய்கின்ற உரிமையை அவனால் செலுத்த முடியும். அதன் மூலம் இறைவனின் அடியார்களுக்குரிய உரிமைகளை செலுத்துவதற்கான நல்வாய்ப்பு அவருக்கு கிடைக்க முடியும். எனவே, இந்த முக்கியமான வழிமுறையை எப்போதும் நாம் நம் கண்முன் நிறுத்த வேண்டும்.

இறைவணக்கத்திற்குரிய உரிமையைச் செலுத்துவது பற்றி இப்போது நான் கூறினேன். அல்லாஹ்வின் கட்டளைக்கு ஏற்ப நாம் நமது பிறப்பின் நோக்கத்தை நிறைவேற்றுபவர்களாக ஆகும்போதுதான் இதனை நாம் நிறைவேற்றுபவர்களாக ஆக முடியும். இது பற்றி அல்லாஹ் கூறுகின்றான். وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْإِنْسَ إِلَّا لِيَعْبُدُونِ அதாவது நான் ஜின்களையும் மனிதர்களையும் என்னை வணங்குவதற்காக மட்டுமே படைத்துள்ளேன். (51:57)

அல்லாஹ்வின் கட்டளைகளின் பக்கம் நாம் பார்க்கின்றபோது ஒரு கட்டளைக்குப் பிறகு இன்னொரு கட்டளை எந்த பக்கம் நம்மை கொண்டு செல்கின்றதென்றால் இறைவனை ஒருபோதும் மறந்து விடாதீர்கள் என்பதையே அது உணர்த்துகின்றது. உங்களது உலக முயற்சிகளும் கூட இறைவனை நினைவு கூர்வதிலிருந்து உங்களை கவனமற்றவர்களாக ஆக்குபவையாக இருக்கக் கூடாது. உலக ஆசைகளை நிறைவேற்றிக் கொள்வது உலகைப் பெற வேண்டும் என்பதற்காக மட்டும் இருக்கக் கூடாது. அது மட்டும் உங்களது குறிக்கோளாக இருக்க கூடாது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இது பற்றி ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்: நான் ஜின்களையும் மனிதர்களையும் அவர்கள் என்னை அடையாளம் கண்டு கொள்ள வேண்டும். என்னை வணங்க வேண்டும் என்பதற்காகவே படைத்துள்ளேன் என்று அல்லாஹ் கூறுகின்றான். எனவே, இந்த வசனத்தின் அடிப்படையில் மனிதனின் வாழ்க்கையின் அசல் குறிக்கோள் இறைவனை வணங்குவது மற்றும் இறைவனை பற்றி அறிந்து கொள்வது மற்றும் இறைவனுக்காக ஆகி விடுவதுமாகும். தனது வாழ்வின் நோக்கத்தை தனது உரிமைக்கேற்ப தானே நிர்ணயித்துக் கொள்கின்ற இந்த தகுதி மனிதனுக்கு கிடைக்கவில்லை என்பது வெளிப்படையாகத் தெரிகின்ற ஒரு விஷயமாகும். ஏனென்றால், மனிதன் தனது விருப்பத்திற்கு ஏற்ப வரவுமில்லை. தனது விருப்பத்திற்கு ஏற்ப அவன் திரும்பிச் செல்லவும் மாட்டான். ஏனென்றால், அவன் படைக்கப்பட்டவனாக இருக்கின்றான். எனவே எவன் அவனை படைத்து எல்லா உயிரினங்களை விடவும் சிறந்த மற்றும் உயர்ந்த ஆற்றல்களை அவனுக்கு வழங்கியுள்ளானோ (அதாவது மற்றவற்றுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது இறைவன் மனிதனை சிறந்த படைப்பினமாக படைத்துள்ளான். சிறந்த ஆற்றல்களை அவனுக்கு வழங்கியுள்ளான்.) எவன் அவனை படைத்து எல்லா உயிரினங்களை விடவும் சிறந்த மற்றும் உயர்ந்த ஆற்றல்களை அவனுக்கு வழங்கியுள்ளானோ அவனே அவனது வாழ்வின் ஒரு நோக்கத்தை நிர்ணயித்திருக்கின்றான். ஒரு மனிதன் அந்த நோக்கத்தைப் புரிந்தாலும் புரியாமல் இருந்தாலும் சரியே. ஆனால், மனிதப் பிறப்பின் குறிக்கோள் எவ்வித சந்தேகமுமின்றி இறைவனை வணங்குவது இறைவனை அறிந்து கொள்வது மற்றும் இறைவனிடம் தன்னை மாய்த்துக் கொள்வதேயாகும்.

(இஸ்லாமிய போதனைகளின் தத்துவ ஞானம். ரூஹானீ கஸாயின் தொகுதி 10 பக்கம் 414)

எனவே, மனிதன் தனது இந்த குறிக்கோள்களை தன் கண் முன் நிறுத்தும்போது அவன் உண்மையான நம்பிக்கை கொண்டவராக ஆகுகின்றான். மேலும் உலகின் நன்மைகளைக் கூட இறைவனின் திருப்தியைப் பெறுவதற்கான ஒரு வழியாக அவன் ஆக்கிக் கொள்கின்றான்.

மனிதனின் மூளையின் தகுதிகள், மனிதனின் பௌதீக ஆற்றல்கள், மனிதனின் சிறந்த பொருளாதார நிலைமை, மனிதனின் தற்போதைய காலத்து கண்டுபிடிப்புகள் ஆகியவை இறைவனை விட்டு அவனை கவனமற்றவனாக ஆக்கி விடக் கூடாது. உடல் நலம், பொருள், மூளையின் தகுதிகள், அக்கம்பக்கத்தில் தென்படுகின்ற உலகப் பொலிவுகள் ஆகியவை நமது பிறப்பின் நோக்கத்தை நாம் மறந்து விடும் வகையில் நம்மை கவனமற்ற நிலையில் ஆக்கி விடக் கூடாது.

நான் ஏற்கனவே கூறியது போன்றே அஹ்மதிகளில் பெரும்பாலார் இந்த நாடுகளில் மார்க்கத்தின் காரணமாகத்தான் வந்துள்ளனர். அவர்களது நாட்டில் அவர்கள் மீது இருந்த மதரீதியிலான அடக்குமுறைகளின் காரணமாக அவர்கள் இங்கு வந்துள்ளனர். இந்த விஷயத்தை எப்போதும் உங்கள் முன்னால் வைத்திருங்கள். அதாவது ஒரு நீண்ட இருள் நிறைந்த காலத்திற்குப் பிறகு மீண்டும் இஸ்லாத்தின் ஒளிமயமான சூரியன் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் காலத்தில் பெருமானார் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கு ஏற்ப உதயமாக இருந்தது. அது முஸ்லிம்களின் உள்ளங்களையும் உண்மையான போதனைகள் மற்றும் பித்அத்துகளிலிருந்து தூய்மையாக இருக்கின்ற போதனைகளை எடுத்துக் கூறி அல்லாஹ் இருள்களிலிருந்து ஒளியின் பக்கம் கொண்டு வர வேண்டியதிருந்தது. மேலும், அது முஸ்லிம் அல்லாதவர்களுக்கும் இஸ்லாத்தின் அழகான உண்மையான போதனைகளை எடுத்துக் கூற வேண்டியதிருந்தது என்ற அறிவிப்பை அஹ்மதிகள் செய்கின்றனர்.

இந்த நாடுகளுக்கு வந்த பிறகு இந்த முக்கிய கடமையை முழுமையாக நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்வது ஒவ்வோர் அஹ்மதியின் கடமையாக இருக்கின்றது. எங்கெல்லாம் அஹ்மதிகள் இருக்கின்றனரோ அவர்கள் தமது சுற்றுச்சூழலில் இருப்பவர்களுக்கு இதனை கூற வேண்டும். அதாவது உண்மையான இஸ்லாம் என்றால் என்ன? என்பதை கூற வேண்டும். ஒவ்வோர் அஹ்மதியின் செயல், அவரது நல்லொழுக்கம், அவரது இறைவணக்கத்தின் தரம் ஆகியவை மற்றவர்களின் கவனத்தை தமது பக்கம் ஈர்க்கக் கூடியதாக இருக்க வேண்டும். இது எங்கு அஹ்மதிகளை மற்றவர்களை விட தனிச்சிறப்புமிக்கவர்களாக ஆக்கி விடுமோ அங்கு அத்துடன் இங்குள்ள உள்ளூர் மக்களுக்கு தப்லீக் செய்வதற்கான வழியைத் திறப்பதற்கும் உதவி செய்யக் கூடியதாக அது இருக்கும். எனவே, இந்த விஷயத்தை ஒவ்வோர் அஹ்மதியும் புரிந்து கொள்ள வேண்டிய தேவை இருக்கின்றது. அதாவது இது ஒரு மிகப்பெரிய நோக்கமாக இருக்கின்றது. ஒவ்வோர் அஹ்மதியும் முதலில் தனது பிறப்பின் நோக்கத்தை சுயமே புரிந்து கொள்ள வேண்டும். பிறகு மற்றவர்களுக்கும் இந்த பிறப்பின் நோக்கத்தைப் புரிந்து கொள்வதன் பக்கம் கவனமூட்ட வேண்டும். அல்லாஹ் படைத்துள்ள இந்த உலகத்தின் அருட்கொடைகள் இறைவனிடமிருந்து உங்களை தொலைவில் கொண்டு செல்வதற்காக படைக்கப்பட்டவை அல்ல. மாறாக, இறைவனுக்கு அருகில் உங்களை கொண்டு வருவதற்காகவே அவை இருக்கின்றன. எனவே இதில் நடுநிலைமையை நீங்கள் கடைபிடிக்க வேண்டும். அது அல்லாமல் நடுநிலைமையிலிருந்து வெளியே விட்டதன் காரணமாக நீங்கள் அழிவின் பக்கம் முன்னேறிச் செல்கின்றீர்கள் என்ற இந்த உண்மையை உலகத்திற்கு நாம் தெரிவிக்க வேண்டும்.

இன்றிலிருந்து நான்கு அல்லது ஐந்து வருடத்திற்கு முன்னதாக உலகம் அழிவை நோக்கி முன்னேறிச் சென்று கொண்டிருக்கின்றது என்ற இந்த கருத்து இல்லாமல் இருந்தது. அல்லது உலகம் இதை ஏற்றுக் கொளவ்தற்கு தயாராக இருக்கவில்லை. ஆனால்

இன்று நிலைமைகள் முற்றிலுமாக மாறி விட்டன. உலகம் எந்த அழிவின் பக்கம் முன்னேறிச் சென்று கொண்டிருக்கின்றதோ அதற்கான அசல் காரணம் இதுவாகும். அதாவது மேற்கத்திய உலகின் முன்னேற்றம் அழிவிலிருந்து அவர்களை காப்பாற்றி விடும் என்று அவர்கள் கருதுகின்றனர். மேலும், இழப்பு ஏற்பட்டாலும் கூட அதை நாம் நிவர்த்தி செய்து விடலாம் என்று அவர்கள் கருதுகின்றனர். இவ்வாறு சிந்திப்பதும் கூட அவர்களின் தவறான எண்ணமாக இருக்கின்றது. போர்களினால் அழிவு வரும்போது அல்லது அழிவு ஏற்படுகின்றனபோது சந்தேகம் இன்றி பொருளாதார அடிப்படையில் மிகவும் உறுதி வாய்ந்த அரசாங்கங்களாக இருந்தாலும் போர்களுக்குப் பிறகு அந்த நாட்டிலுள்ள அரசாங்கம் முதலில் தன்னைத் தானே சீர்படுத்திக் கொள்ளத்தான் முதலில் முயற்சி செய்யும். இப்போது அவ்வாறே அவை செய்யும். இவ்விஷயத்தில் குறைந்த உறுதிப்பாட்டில் இருக்கின்ற நாடுகள் மற்றும் ஐரோப்பாவிலுள்ள சில நாடுகளில் நிலை இன்னும் அதிகமாக மோசமான நிலைமைக்குச் சென்று விடலாம். எங்கெல்லாம் அஹ்மதிகள் இருக்கின்றனரோ அவர்கள் செயலளவிலான முயற்சியுடன் எல்லாவற்றையும் விட அதிகமாக துஆக்கள் செய்வதன் மூலமாக அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். அல்லாஹ்வின் அருள்தான் உலகை அழிவில் இருந்து காப்பாற்ற முடியும். மேலும் அல்லாஹ்வின் அருளை ஈர்ப்பதற்காக அல்லாஹ் கூறியுள்ள அந்த விஷயங்களை செயல்படுத்த வேண்டியது அவசியமானதாகும். அவன் முன்னால் குனிந்தவாறுதான் அவனை நாம் திருப்திப்படுத்த முடியும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மீது நம்பிக்கை கொள்வதனால் மட்டும் ஒருவரை அது உலகம் மற்றும் மறுமையின் நன்மைகளுக்கு வாரிசாக்கி விடாது என்பதை ஒவ்வோர் அஹ்மதியும் நினைவில் கொள்ள வேண்டும். அவ்வாறே நெருப்பின் தண்டனையிலிருந்து அது மட்டும் நம்மை காப்பாற்றாது. மாறாக, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொள்வது அதிகமான பொறுப்புகளை நம்மீது சுமத்துகின்றது. அதாவது நாம் நமது வாழ்க்கையை அல்லாஹ்வின் விருப்பத்திற்கு ஏற்ப வடிவமைத்துக் கொள்ள வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்: ''நினைவில் கொள்ளுங்கள். பைஅத் செய்வதனால் மட்டும் எதுவும் நடந்து விடாது. அல்லாஹ் இந்த சடங்கினால் திருப்தி அடைந்து விடுவதில்லை. பைஅத்தின உண்மையான கருத்திற்கு ஏற்ப செயல்படாத வரை இந்த பைஅத், பைஅத் ஆகாது. வெறும் சடங்காக மட்டுமே அது இருக்கும். எனவே, பைஅத்தின் உண்மையான குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்வது அவசியமானதாகும்.''

உண்மையான குறிக்கோள் எது? அதைப் பற்றி அன்னார் கூறுகின்றார்கள்: அதாவது தக்வாவை கடைபிடியுங்கள். திருக்குர்ஆனை முழுமையான கவனத்துடன் படியுங்கள். அது பற்றி சிந்தனை செய்யுங்கள். பிறகு செயல்படுங்கள். ஏனென்றால், அல்லாஹ்வின் நடைமுறை, அல்லாஹ் வெறுமனே பேச்சுக்களால் மட்டும் மகிழ்ச்சி அடைவதில்லை. மாறாக அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக அவனது கட்டளை –களைப் பின்பற்றி நடப்பது அவசியமானதாகும். மேலும் அவன் தடுத்தவற்றில் இருந்து தவிர்ந்திருக்க வேண்டும்.

இது எத்தகைய தெளிவான விஷயமாக இருக்கின்றது என்றால் மனிதனும் கூட வெறும் பேச்சுக்களால் மகிழ்ச்சி அடைவதில்லை என்பதை நாம் பார்க்கின்றோம். மாறாக அவனும் கூட தொண்டு செய்வதனால்தான் மகிழ்ச்சி அடைகின்றான்.

அன்னார் கூறுகின்றார்கள்: உண்மையான முஸ்லிமுக்கும் பொய்யான முஸ்லிமுக்கும் உள்ள இந்த வித்தியாசம்தான் இருக்கும். அதாவது பொய்யான முஸ்லிம் பேசிக் கொண்டே இருக்கின்றான். எதையும் செய்ய மாட்டான். அதற்கு எதிரில் உண்மையான முஸ்லிம் அவற்றை செயல்படுத்திக் காட்டுகின்றான். வெறுமனே அவன் பேசிக்கொண்டிருப்பதில்லை. எனது அடியான் எனக்காக என்னை வணங்கு –கின்றான். எனக்காக எனது படைப்பினங்களுடன் பரிவுடன் நடந்து கொள்கின்றான் என்பதை இறைவன் பார்க்கின்றபோது தனது மலக்குகளை அவர் மீது இறக்குகின்றான். அவ்வாறே தனது வாக்குறுதிக்கு ஏற்ப உண்மையான முஸ்லிம் மற்றும் பொய்யான முஸ்லிமுக்கும் இடையில் அவன் ஒரு வித்தியாசத்தை வைத்து விடுகின்றான். (மல்ஃபூஸாத் தொகுதி 6 பக்கம் 404-405; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

எனவே, உண்மையான முஸ்லிமாக ஆகுவதற்கு முயற்சி செய்வது நம்மில் ஒவ்வொருவரது கடமையாக இருக்கின்றது. இந்த உலகின் நன்மைகள் மற்றும் அருள்களிலிருந்து அவை நம்மை மறுமையின் நன்மைகளுக்கு வாரிசாக்க வேண்டும் என்பதற்காக நாம் அவற்றிலிருந்து பயன் பெறுபவர்களாக இருக்க வேண்டும். மேலும் நாம் நமது இறைவணக்கத் –திற்குரிய உரிமைகளை செலுத்துபவர்களாக ஆகுவதற்கு அவை உதவ வேண்டும். மார்க்கத்தின் காரணமாக நிர்பந்தமான சூழ்நிலையில் நமக்கு நமது நாட்டை விட்டு விட்டு வர வேண்டியது வந்தாலும் இங்கு வந்து மார்க்க போதனைகளுக்கு ஏற்ப செயல்படுவதற்கான உரிமையைச் செலுத்துபவர்களாக நாம் ஆக வேண்டும். அல்லாஹ் நம் அனைவருக்கும் இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக.

★ ★ ★ ★ ★

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கூறுகின்றார்கள்:

**தொழுகை இறைவனுக்குரிய உரிமையாகும். அதை சிறந்த முறையில் நிறைவேற்றுங்கள். முழு வீடுமே அழிந்து விட்டாலும் கூட அழிந்து போகட்டும். ஆனால், தொழுகையை விட்டு விடாதீர்கள். தொழுகை கெட்ட சகுனமாகும். தொழ ஆரம்பித்ததனால் எங்களுக்கு இன்னின்ன இழப்புகள் ஏற்பட்டன என்று கூறுபவர்கள் காஃபிராகவும் நயவஞ்சகர்களாகவும் இருக்கின்றனர். தொழுகை ஒருபோதும் இறைவனின் கோபத்தைப் பெறுகின்ற வழி அல்ல. யார் அதனை தீய சகுனம் என்று கூறுகின்றனரோ அவர்களுக்குள்ளே சுயமே விஷம் இருக்கின்றது. எவ்வாறு நோயாளியாக இருப்பவருக்கு இனிப்பு கசப்பாக இருக்கின்றதோ அவ்வாறே தொழுகையில் அவருக்கு ரசனையும் இன்பமும் கிடைக்கவில்லை. தொழுகை மார்க்கத்தை சரியாக ஆக்குகின்றது. ஒழுக்கத்தை சரி செய்கின்றது. உலகை சரியாக்குகின்றது. தொழுகையிலுள்ள இன்பம் உலகிலுள்ள எல்லா இன்பங்களை விடவும் மிகைத்து நிற்கின்றது. பௌதீகமான இன்பங்களை பெறுவதற்காக ஆயிரக்கணக்கில் செலவு செய்கின்றோம். பிறகு அவற்றின் விளைவு நோய்களாகத்தான் இருக்கின்றன. தொழுகை இலவசகமாக ஒருவருக்கு கிடைக்கின்ற சுவர்க்கமாக இருக்கின்றது. திருக்குர்ஆனில் இரண்டு சுவர்க்கங்களைப் பற்றிய குறிப்பு இருக்கின்றது. அவற்றில் ஒன்று, உலகில் கிடைக்கும் சுவர்க்கமாகும். அது தொழுகையில் கிடைக்கும் இன்பமாகும்.**

[மல்ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 591–592; 2003 –ஆம் ஆண்டு பதிப்பு – இந்தியாவில் வெளியிடப்பட்டது]

# ஜுமுஆ பேருரை

முஸ்லிம்களில் எவருக்கு அல்லாஹ் நல்வாய்ப்பை வழங்கியிருக்கின்றானோ அவர் ஹஜ்ஜிற்கு சென்றாலும் செல்லா விட்டாலும் குர்பானி கொடுப்பதற்கான நல்வாய்ப்பு இருந்தால் அந்த நாட்களில் விலங்குகளை கண்டிப்பாக குர்பானி கொடுக்க வேண்டும் என்ற கட்டளை இருக்கின்றது. எனவே இந்த காரணத்தினால்தான் உலகில் கோடிக்கணக்கான முஸ்லிம்கள் ஹஜ்ஜையும் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) மற்றும் ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை) ஆகியோரின் தியாகங்களையும் கருத்தில் கொண்டவாறு ஈதுல் அழ்ஹாவை கொண்டாடுகின்றனர். விலங்குகளை குர்பானி கொடுக்கின்றனர். ஆனால் இந்த விலங்குகளை குர்பானி கொடுப்பதனால் மட்டும் மனிதன் அல்லாஹ்வின் பார்வையில் ஏற்றுக் கொள்ளப்பட்டவனாக ஆகி விடுவதில்லை. மாறாக, அல்லாஹ் இந்த வசனத்தில் இந்த கருத்தையே விளக்கிக் கூறியவாறு நம்பிக்கை கொண்டவர்களுக்கு இதன் பக்கம் கவனமூட்டுகின்றான். அதாவது அசல் விஷயம் உங்கள் உள்ளங்களிலுள்ள தூய்மைக்கும் இறையச்சத்திற்கும்தான் அல்லாஹ் மதிப்பளிக்கின்றான்.

---

அல்லாஹ்வின் மீதுள்ள அன்பு, அவன் மீதுள்ள அச்சம், அவனது அந்தஸ்து, அவனது இருப்பை அடையாளங்கண்டு கொள்வது ஆகியவை இறை ஞானத்தை உருவாக்குகின்றது. இந்த இறை ஞானம் உருவாகும்போது பிறகு மனிதன் ஒவ்வொரு பாவத்திலிருந்தும் தவிர்ந்திருக்கின்றான்.

---

வெளிப்படையான தொழுகை மற்றும் நோன்பை நிறைவேற்றுவதுடன் அவை தன்னகத்தே கலப்பற்ற தன்மையையும் உண்மையையும் கொண்டிருக்காத வரை எந்த சிறப்பையும் அது பெறாது.

இறையச்சமுள்ளவர்கள் தமது வாழ்க்கையை ஏழ்மையின் நிலையில் எளிமையாக கழிக்க வேண்டும் என்பது நிபந்தனையாகும்.

மனிதனுக்கு கோபம் ஏன் வருகின்றது? ஏனென்றால் சில நிலைமைகளில் அவனிடம் தற்பெருமையும் ஆணவமும் காணப்படுகின்றது. மற்றவர்களை அவன் தன்னை விட அற்பமானவர்களாக கருத ஆரம்பிக்கின்றான். தன்னை பெரியவனாக அவன் நினைக்கின்றான். பிறரது சிறிய தவறைக் காணும்போது அவனுக்கு கோபம் வந்து விடுகின்றது.

---

எவர்கள் விரைவில் கோபமடைந்து சண்டையிடத் தயாராகி விடுகின்றனரோ அவர்களுக்கு இது சிந்திக்க வேண்டிய இடமாக இருக்கின்றது. அந்த கோபம் குடும்பத் தொடர்புகளுடன் தொடர்புடையதாக இருந்தாலும் சரி அல்லது கணவன், மனைவிக்கு இடையில் உள்ள தொடர்புகளில் காணப்பட்டாலும் சரி அல்லது சமுதாயத் தொடர்புகளில் கோபத்தை வெளிப்படுத்தினாலும் சரி ஒவ்வோர் இடத்திலும் அவர்கள் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக தியாகத் திருநாளாக இருக்கும் இந்த பெருநாளில் இதன் பக்கம் குறிப்பாக நாம் கவனம் செலுத்த வேண்டும். அதாவது நாம் கோபப்படுவதை விட்டு விட வேண்டும். நம்மை நாமே தியாகம் செய்தவாறு நமது ஆன்மாவை நாம் சிறந்த நிலையில் வைத்திருக்க வேண்டும்.

உண்மையான இறை ஞானம் பணிவையும் தாழ்மைக் குணத்தையும் கடைபிடிப்பதன் மூலமாகவே கிடைக்கின்றது. அதற்காக இறைவனின் சந்நிதியில் விழுவது அவசியமானதாகும். அவனிடம் உதவி கேட்பது அவசியமானதாகும்.

எதுவரை ஒரு ஜமாஅத் இறைவனின் பார்வையில் இறையச்சம் உள்ள ஜமாஅத்தாக ஆகுவதில்லையோ அதுவரை இறைவனின் உதவி அதற்கு கிடைக்காது.

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 2 செப்டம்பர் 2017** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1396 -ஆம் ஆண்டு **தபூக்** மாதம் **2 -ஆம் தேதி** ஆற்றிய **ஈதுல் அழ்ஹா பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ ـ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ ـ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ـ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ـ اِيَّاكَ نَعْبُدُ وَ اِيَّاكَ نَسْتَعِيْنُ ـ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ـ صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ـ

لَنْ يَّنَالَ اللّٰهَ لُحُوْمُهَا وَلَا دِمَآؤُهَا وَلٰكِنْ يَّنَالُهُ التَّقْوٰى مِنْكُمْ ـ كَذٰلِكَ سَخَّرَهَا لَكُمْ لِتُكَبِّرُوا اللّٰهَ عَلٰى مَا هَدٰكُمْ ـ وَبَشِّرِ الْمُحْسِنِيْنَ

இந்த வசனத்தின் பொருள்: அவற்றின் இறைச்சியும் அவற்றின் இரத்தமும் ஒருபோதும் அல்லாஹ்வை சென்றடைவதில்லை. மாறாக உங்கள் உள்ளங்களிலுள்ள இறையச்சம்தான் அவனை சென்றடைகின்றது. அல்லாஹ் உங்களுக்கு நேர்வழி காட்டியதற்காக நீங்கள் அவனது பெருமையினை எடுத்துரைக்க இவ்வாறு அவன் அவற்றை உங்களுக்கு தொண்டு செய்ய வைத்தான். நற்செயல் செய்பவர்களுக்கு நீர் நற்செய்தியினை வழங்குவீராக. (22:38)

இந்த வசனம் தியாகங்களின் கருத்தை எடுத்துக் கூறும் வசனங்களில் ஒன்றாகும். ஹஜ்ஜின் கருத்தை எடுத்துக் கூறுகின்ற வசனங்களுடன் இந்த வசனம் வைக்கப்பட்டிருக்கின்றது. முஸ்லிம்களில் எவருக்கு அல்லாஹ் நல்வாய்ப்பை வழங்கியிருக்கின்றானோ அவர் ஹஜ்ஜிற்கு சென்றாலும் செல்லா விட்டாலும் குர்பானி கொடுப்பதற்கான நல்வாய்ப்பு இருந்தால் அந்த நாட்களில் விலங்குகளை கண்டிப்பாக குர்பானி கொடுக்க வேண்டும் என்ற கட்டளை இருக்கின்றது. எனவே இந்த காரணத்தினால் தான் உலகில் கோடிக்கணக்கான முஸ்லிம்கள் ஹஜ்ஜையும் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) மற்றும் ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை) ஆகியோரின் தியாகங்களையும் கருத்தில் கொண்டவாறு ஈதுல் அழ்ஹாவை கொண்டாடுகின்றனர். விலங்குகளை குர்பானி கொடுக்கின்றனர். ஆனால் இந்த விலங்குகளை குர்பானி கொடுப்பதனால் மட்டும் மனிதன் அல்லாஹ்வின் பார்வையில் ஏற்றுக் கொள்ளப்பட்டவனாக ஆகி விடுவதில்லை. மாறாக, அல்லாஹ் இந்த வசனத்தில் இந்த கருத்தையே விளக்கிக் கூறியவாறு நம்பிக்கை கொண்டவர்களுக்கு இதன் பக்கம் கவனமூட்டுகின்றான். அதாவது அசல் விஷயம் உங்கள் உள்ளங்களிலுள்ள தூய்மைக்கும் இறையச்சத்திற்கும்தான் அல்லாஹ் மதிப்பளிக்கின்றான்.

எனவே, நம்பிக்கை கொண்ட ஒருவர் நான் பெருநாளில் இந்த அளவு தடித்த, மேலும் இந்த

அளவு விலை மதிப்புள்ள விலங்கை குர்பானி கொடுத்துள்ளேன் என்ற விஷயத்தில் மகிழ்ச்சி அடைந்து விட வேண்டாம். இறையச்சம் இல்லாமலும் குர்பானி கொடுப்பது உங்களுக்கு தியாகங்கள் மற்றும் உங்களது உள்ளங்களில் தூய்மையான மாற்றங்கள் உருவாக்குவது ஆகியவற்றின் பக்கம் கவனமூட்டக் கூடியவையாக இல்லாமல் இருந்தால் நீங்கள் எவ்வளவு தடித்த விலை மதிப்புள்ள விலங்கை குர்பானி கொடுத்தாலும் அவை அல்லாஹ்வின் பார்வையில் பலனற்றதாகும்.

இந்த கருத்திலுள்ள ஞானத்தையும் அதன் ஆழத்தையும் விளக்கத்தையும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பல்வேறு இடங்களில் எடுத்துக் கூறியுள்ளார்கள். அவர்களின் சில மேற்கோள்களை இப்போது நான் எடுத்துக் கூறுவேன். தனது ஆன்மாவை முழுமையான விருப்பத்துடன் அல்லாஹ்வின் காலடிகளில் வைத்து விடுவது அல்லது தன்னைத் தானே அறுத்துப் பலியிடுவதற்காக அர்ப்பணித்து விடுவது என்பதற்கே இஸ்லாம் என்று பெயர் என்பதை விளக்கியவாறு அன்னார் இவ்வாறு கூறுகின்றார்கள்: அதாவது, இந்த அந்தஸ்தானது இறைவனை பற்றிய முழுமையான ஞானம் கிடைத்த பிறகுதான் கிடைக்கின்றது.

முழுமையான இறை ஞானம் எவ்வாறு கிடைக்கும் என்பதைப் பற்றி அன்னார் இவ்வாறு கூறுகின்றார்கள்: அச்சம், அன்பு மற்றும் கண்ணியமளித்தல் ஆகியவற்றின் வேர் முழுமையான ஞானமாகும். எவருக்கு முழுமையான ஞானம் வழங்கப்பட்டிருக்கின்றதோ அவருக்கு முழுமையான அச்சமும் அன்பும் வழங்கப்பட்டிருக்–கின்றது. அவருக்கு துணிச்சலினால் உருவாகின்ற ஒவ்வொரு பாவத்திலிருந்தும் இரட்சிப்பு வழங்கப்பட்டிருக்கின்றது.

எனவே, அல்லாஹ்வின் மீதுள்ள அன்பு, அவன் மீதுள்ள அச்சம், அவனது அந்தஸ்து, அவனது இருப்பை அடையாளங்கண்டு கொள்வது ஆகியவை இறை ஞானத்தை உருவாக்குகின்றது. இந்த இறை ஞானம் உருவாகும்போது பிறகு மனிதன் ஒவ்வொரு பாவத்திலிருந்தும் தவிர்ந்திருக்கின்றான்.

பிறகு மனிதனுக்கு பாவங்களிலிருந்து இரட்சிப்பு கிடைத்து விடுகின்றது என்று அன்னார் கூறுகின்றார்கள்: "எனவே, இந்த இரட்சிப்பை பெறுவதற்கு எந்த இரத்தத்தின் தேவையும் நமக்கு இல்லை. எந்த சிலுவையின் தேவையை உடையவர்களாகவும் நாம் இல்லை. எந்த பரிகாரக் கொள்கையின் தேவையும் நமக்கு இல்லை. மாறாக, நாங்கள் ஒரு தியாகத்தின் தேவையை உடையவர்களாக இருக்கின்றோம். அது சுயமே நம்மை நாமே தியாகம் செய்வதாகும். அதன் தேவையை நமது இயல்பு உணர்ந்து கொண்டிருக்கின்றது. அத்தகைய தியாகத்திற்கு தான் வேறு சொற்களில் இஸ்லாம் என்று பெயராகும்.'' தன்னை தியாகம் செய்யும்போது தான் மனிதன் உண்மையான முஸ்லிமாக ஆகின்றான்.

ஹுஸூர் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: அறுக்கப்படுவதற்காக கழுத்தை முன்னால் வைத்து விடுவதுதான் இஸ்லாம் என்பதன் பொருளாகும். அதாவது முழுமையான விருப்பத்துடன் தமது ஆன்மாவை இறைவனின் சந்நிதியில் வைத்து விடுவதாகும்.

தொடர்ந்து அன்னார் கூறுகின்றார்கள்: "இந்த அன்பான பெயர் முழு ஷரீஅத்தின் ஆன்மாவாகவும் எல்லா கட்டளைகளின் உயிராகவும் இருக்கின்றது. அறுக்கப்படு–வதற்காக தமது உள்ளத்தை விருப்பத்துடனும் மகிழ்ச்சியுடனும் கழுத்தை முன்னால் வைப்பது முழுமையான நேசத்தையும் முழுமையான பேரன்பையும் வேண்டுகின்றது.''

அதாவது மகிழ்ச்சியுடனும் விருப்பத்துடனும் தனது கழுத்தை மனிதன் அறுக்கப்படுவதற்காக முன்னால் வைத்து விடுகின்றான். நேசமும் பேரன்பும் முழுமையாக இருக்கும்போதுதான் தியாகம் செய்வதற்கு மனிதன் தன்னை அர்ப்பணிக்க முடியும்.

தொடர்ந்து அன்னார் கூறுகின்றார்கள்: "முழுமையான நேசம் முழுமையான ஞானத்தை வேண்டுகின்றது. எனவே, இஸ்லாம் என்ற சொல் உண்மையான தியாகத்திற்கு முழுமையான ஞானமும் முழுமையான அன்பும் தேவைப்படு–கின்றது. வேறு எதன் தேவையும் இல்லை என்பதை சைகையாக சுட்டிக் காட்டுகின்றது. இதன் பக்கமே இறைவனும் திருக்குர்ஆனிலுள்ள, உங்களது (குர்பானியின்) இறைச்சியும் அவற்றின் இரத்தமும் என்னை வந்தடைவதில்லை. மாறாக, இந்த குர்பானி மட்டுமே என்னை வந்தடைகின்றது **(22:38)** என்ற வசனத்தில் கூறுகின்றான்.''

அது என்ன குர்பானி? அன்னார் கூறுகின்றார்கள்: "நீங்கள் எனக்கே அஞ்ச வேண்டும். எனது தக்வாவை மேற்கொள்ள வேண்டும்'' என்று இறைவன் கூறுகின்றான்.

(லெக்சர் ஸியால்கோட். ரூஹானீ கஸாயின் தொகுதி 20 பக்கம் 151-152)

எனவே, இந்த கருத்தையும் தத்துவத்தையும் புரிந்து கொள்ள வேண்டியது அவசியமானதாகும். அல்லாஹ் அச்சத்திற்குரியவனாக இருப்பதனால் தான் எனக்கு அஞ்சுங்கள் என்று கூறுகின்றான் என்பது இதன் பொருள் அல்ல. மாறாக, மிகவும் பிரியமான ஓர் உறவு முறிந்து வெறுப்பு ஏற்பட்டு விடக் கூடாதே என்பதனால் ஏற்படும் அச்சமாக அது இருக்கின்றது. தாய் தன்னிடம் வெறுப்படைந்து விடக் கூடாதே என்று குழந்தைகள் அஞ்சுகின்றன என்றால் தாய் அச்சுறுத்தக் கூடியவள் என்பதனால் அல்ல. மாறாக, தாயைப் போன்ற அன்பு எங்குமே கிடைப்பதில்லை. குழந்தைகளுக்கு தாயுடன் குறிப்பான ஒரு தொடர்பு இருக்கின்றது. அதன் காரணமாக தாயின் வெறுப்பை விலை கொடுத்து வாங்க அவர்கள் விரும்புவதில்லை. தாயின் ஒவ்வொரு கூற்றுக்கும் எப்படி கண்ணியமளிக்க வேண்டும் என்று அவர்களுக்கு தெரியும். பெரிய வயதை அடைந்த பிறகும் கூட தாய் தந்தையர் மீது அன்பு கொள்கின்ற குழந்தைகள் அவர்கள் தம்மீது வெறுப்படைவதை விரும்புவதில்லை. அவர்களை திருப்திப்படுத்துவதற்காக அவர்கள் எல்லா வகையிலும் முயற்சி செய்கின்றனர். தற்காலிகமான நேசங்களாக இருக்கின்ற உலக நேசங்களில் நாம் இதை பார்க்கின்றோம். அதாவது காதலி பொவுசு காட்டுகின்றபோது அதை சகித்துக் கொள்வதற்காக சில உலகவாதிகள் என்னவெல்லாம் செய்கின்றனர்? பெரும்பாலும் இந்த தற்காலிக நேசங்கள் ஒரு சமயத்தில் முடிந்து விடுகின்றன. ஆனால் இறைவன் மீதுள்ள நேசம் எத்தகையது என்றால் அது உலகையும் மறுமையையும் சரி செய்யக் கூடியதாக இருக்கின்றது. இறைவன் மீதுள்ள இந்த அச்சம் இறைவன் மீதுள்ள அன்பினாலேயே உருவாகின்றது. அதை உங்கள் உள்ளங்களில் உருவாக்குங்கள் என்றே அல்லாஹ் கூறுகின்றான். இறைவனின் உயர் அந்தஸ்திற்கு மதிப்பளிப்பதன் காரணமாகத்தான் இந்த அச்சம் உருவாகின்றது.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: எதுவரை இறைவனைப் பற்றிய அறிவு கிடைக்க–வில்லையோ அதுவரை அவனைப் பற்றிய உண்மையான அச்சம் ஏற்பட முடியாது. இறைவனைப் பற்றிய அறிவு கிடைக்காததன் காரணமாகவே மனிதன் பல பாவங்களைச் செய்கின்றான். அல்லாஹ்வின் மீது அன்பு வைத்திருப்பதாக நாவளவில் அவன் வாதம் செய்கின்றான். ஆனால் பெரும்பாலான நேரங்களில் உலகப் பொருள்கள் மீதுள்ள அன்பு இறைவன் மீதுள்ள அன்பை விட மிகைத்து விடுகின்றது. அதனால் தற்காலிக பலன்களுக்காக மனிதன் அல்லாஹ்வின் கட்டளைகளை மறந்து விடுகின்றான். அல்லாஹ் எல்லா ஆற்றல்களுக்கும் எஜமானனாக இருக்கின்றான் என்று கூறப்படுகின்றது. ஆனால் உலகிலுள்ள எஜமானர்களை மகிழ்விப்பதற்காக சில நேரங்களில் அல்லாஹ்வின் கட்டளைகளை அவன் தனது முதுகுக்குப் பின்னால் எறிந்து விடுகின்றான். பெரும்பாலான நேரங்களில் மனிதன் எத்தகைய உறுதியான பழக்கங்களுக்கு அடிமையாகி விடுகின்றான் என்றால் அவன் முற்றிலும் பொருட்படுத்தாமல் பணிகளைச் செய்து கொண்டிருக்கின்றான். ஓர் இறைவன் இருக்கின்றான். அவன் என்னை பார்த்துக் கொண்டிருக்கின்றான் என்ற எண்ணமே அவனுக்கு வருவதில்லை. எனவே எவர்கள் அல்லாஹ்வை பற்றி முழுமையான ஞானம் உடையவர்களாக இருக்கின்றார்களோ அவர்கள் அவன் மீதுள்ள அச்சம் மற்றும் அன்பிலும் உயர்வான தரத்தைப் பெற்றிருப்பவர்களாக இருக்கின்றனர். அப்படிப்பட்டவர்கள் பாவம் செய்வதற்கு துணிய மாட்டார்கள். இந்த பாவங்களிலிருந்து விலகி அவர்கள் தூய்மை அடைந்து விடுகின்றனர். அவர்கள் இரவு பகலாக எவ்வாறு நாம் நமது அன்பான இறைவனை திருப்திப்படுத்தப் போகிறோம் என்ற

கவலையிலேயே ஆழ்ந்திருக்கின்றனர். எல்லா சமயத்திலும் அவனது கட்டளைகளை நிறைவேற்ற முயற்சி செய்கின்றனர். அல்லாஹ்வின் கட்டளை –களுக்கு எதிரில் உலக பலன்களுக்கு அவர்கள் முன்னுரிமை வழங்குவதில்லை. இதற்காக தங்களையும் தங்களது விருப்பங்களையும் தியாகம் செய்ய வேண்டியது வந்தாலும் அவற்றை அவர்கள் தியாகம் செய்து விடுகின்றனர். இந்த தியாகத்திற்கே இஸ்லாம் என்று பெயராகும் என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்.

பைஅத் உடன்படிக்கையின்போது உலகத்தை விட மார்க்கத்திற்கு முக்கியத்துவம் கொடுப்போம் என்று நாம் கூறுகின்றோம். அல்லாஹ்வின் அந்தஸ்து அவனது இருப்பு பற்றிய அறிவு கிடைக்கும்போதுதான் இதன் உண்மையான தரத்தை நாம் அடைய முடியும். தன்னை தியாகம் செய்வது அல்லது உலகத்தை விட மார்க்கத்திற்கு முக்கியத்துவம் அளிப்பது ஆகியவற்றை எவ்வித நிர்பந்தத்தினாலோ அல்லது உள்ளத்தில் விருப்பம் இல்லாமலோ செய்யக் கூடாது. மாறாக, உள்ளத்தில் விருப்பத்துடனும் மகிழ்ச்சியுடனும் இதை செய்ய வேண்டும். இறைவன் மீதுள்ள அச்சத்தை, தக்வாவை மனிதன் கடைபிடிக்கும் போதுதான் இந்த நிலை உருவாகின்றது என்று அன்னார் கூறுகின்றார்கள்.

இதே கருத்தை இன்னோரிடத்தில் ஹுஸூர் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: இறைவன் இஸ்லாமிய ஷரீஅத்தில் பல அவசியமான கட்டளைகளின் முன்மாதிரியை நிலைநாட்டி –யுள்ளான். தனது எல்லா ஆற்றல்களையும் பயன்படுத்தியவாறு இறைவனின் வழியில் அர்ப்பணமாகி விட வேண்டும் என்றே மனிதனுக்கு கட்டளையிடப்பட்டிருக்கின்றது. வெளிப்படையான குர்பானியில் இதே நிலைமைக்கான முன்மாதிரியாக வைக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், உண்மையான குர்பானி தன்னை இறை வழியில் அர்ப்பணிப்பதே ஆகும். இதைப் பற்றியே அல்லாஹ் அவற்றின் இறைச்சியும் அவற்றின் இரத்தமும் அல்லாஹ்வை சென்றடைவதில்லை. மாறாக, உங்களது உள்ளங்களிலுள்ள இறையச்சம்தான் அவனை சென்றடைகின்றது என்று கூறுகின்றான். (22:38) செம்மறி ஆடுகளையும், ஆடுகளையும் அறுப்பது ஒரு முன்மாதிரியாகும். இந்த சிறிய பொருள் நமக்காக தன்னை அர்ப்பணித்து விட்டது. நாம் அதை குர்பானி கொடுக்கின்றோம். அல்லாஹ் –வுக்காக நாம் நம்மை அர்ப்பணித்து விட முடியுமா என்ன? அதற்கு நாம் தயாராக இருக்கின்றோமா என்ன? என்பதை ஆய்வு செய்வதற்காக இந்த முன்மாதிரி வைக்கப்பட்டிருக்கின்றது.

அன்னார் இந்த வசனத்தை மொழியாக்கம் செய்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்: "அதாவது இறைவன் வரை உங்களது குர்பானியின் இறைச்சி சென்றடைவதில்லை. அதன் இரத்தமும் சென்றடைவதில்லை. ஆனால் உங்களது தக்வா அவனை சென்றடைகிறது. அதாவது அவனுக்கு எந்த அளவு நீங்கள் அஞ்ச வேண்டும் என்றால் ஒரு வகையில் அவனது வழியில் மரணித்து விட வேண்டும். எவ்வாறு உங்களது கைகளால் குர்பானி கொடுக்கப்படும் விலங்குகளை நீங்கள் அறுக்கின்றீர்களோ அவ்வாறே நீங்களும் இறைவனின் வழியில் அறுபட்டு விடுங்கள். இந்த தகுதியை விட குறைவான நிலையில் இருக்கின்ற தக்வா இப்போது குறைபாடுள்ளதாகவே இருக்கின்றது."

(சஷ்மமேய ம.்.ரி.்.பத். ரூஹானீ கஸாயின் தொகுதி 23 பக்கம் 99 அடிக்குறிப்பு)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வெளிப்படையான தொழுகை, நோன்பு, இறை வணக்கங்கள், குர்பானி கொடுப்பது ஆகியவை ஏன் வைக்கப்பட்டுள்ளன? என்பதன் ஞானத்தை விளக்கியவாறு ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்: "வெளிப்படையான தொழுகை மற்றும் நோன்பை நிறைவேற்றுவதுடன் அவை தன்னகத்தே கலப்பற்ற தன்மையையும் உண்மையையும் கொண்டிருக்காத வரை எந்த சிறப்பையும் பெறாது. தவமிருப்பவர்களும் சன்னியாசிகளும் கூட தத்தமது இடங்களில் பெரும் பெரும் உடற்பயிற்சிகளை மேற்கொள் –கின்றனர். அவர்களில் சிலர் தங்களது கைகளை கூட காய்ந்து போகும் அளவில் விட்டு விடுகின்றனர். தவமிருப்பவர்கள் சில பயிற்சிகளை செய்யும்போது தங்களது கைகளை ஒரே நிலையில் ஒரே இடத்தில் வைப்பர். பல நாட்களாக பல மாதங்களாக அங்கேயே தமது கைகளை அவர்கள் வைத்திருந்ததன் காரணமாக அவர்களது கைகள் காய்ந்து விடுகின்றன."

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: "பெரும் பெரும் துன்பங்களைத் தாங்கியவாறு தங்களை துயரங்களில் அவர்கள் ஆழ்த்திக் கொள்கின்றனர். ஆனால் இந்த துன்பங்கள் அவர்களுக்கு எந்த ஒளியையும் வழங்குவதில்லை. அதனால் அவர்களுக்கு எந்தவொரு மனநிறைவும் நிம்மதியும் ஏற்படுவதில்லை. மாறாக, அவர்களின் அகத்தின் நிலைமை மோசமாக இருக்கின்றது. அவர்கள் உடற்பயிற்சிகளை மேற்கொள்கின்றனர். அதற்கு அகத்துடன் மிகவும் குறைவான தொடர்புதான் இருக்கின்றது. அதன் எந்தவொரு தாக்கமும் அவர்களது ஆன்மீகத்தின் மீது ஏற்படுவதில்லை. எனவேதான் திருக்குர்ஆனில் இறைவன் உங்களது குர்பானிகளின் இறைச்சியும், இரத்தமும் அவனை சென்றடைவதில்லை. மாறாக உங்களது தக்வாதான் அவனை சென்றடை –கின்றது (22:38) என்று கூறுகின்றான். உண்மையில் இறைவன் தோலை விரும்புவதில்லை. மாறாக அவன் சத்தையே விரும்புகின்றான்." வெளிப்படையான பொலிவுகளை இறைவன் விரும்புவதில்லை. மாறாக, அசல் விஷயம் சத்தாக இருக்கின்றது. அதையே அல்லாஹ் விரும்புகின்றான்.

தொடர்ந்து அன்னார் கூறுகின்றார்கள்: இறைச்சியும் இரத்தமும் அவனை சென்றடைவ –தில்லை. மாறாக இறையச்சம்தான் அவனை சென்றடைகின்றது என்றால் பிறகு குர்பானி கொடுக்க வேண்டிய தேவை என்ன வந்து விட்டது? இவ்வாறே தொழுகையின் ஆன்மாவே அசல் வடிவமாக இருக்கும்போது வெளிப்படையான தொழுகையின் தேவை என்ன வந்து விட்டது? என்ற கேள்வி எழுகின்றது. இதற்குரிய பதில் என்னவென்றால், எவர்கள் உடல் மூலமாக பணிகளைச் செய்வதை விட்டு விடுகின்றனரோ அவர்களது ஆன்மாவும் அவற்றை ஏற்றுக் கொள்வதில்லை. பிறகு தனது ஒவ்வொரு தேவையையும் இறைவனிடம் கேட்கும் நிலையும் அவனை வணங்கும் நிலையும் உருவாகாது. எவர்கள் உடலை வேலை செய்ய வைத்து ஆன்மாவை அதில் பங்கு பெற வைப்பதில்லையோ அவர்களும் கூட அபாயகரமான தவறில் ஆழ்ந்திருக்கின்றனர். தவமிருப்பவர்கள் இந்த வகையை சார்ந்தவர்களாக இருப்பர். ஆன்மாவிற்கும் உடலுக்கும் இடையில் இறைவன் ஒரு தொடர்பை வைத்துள்ளான். உடலின் தாக்கம் ஆன்மாவின் மீது ஏற்படுகின்றது. எனவே ஆன்மாவில் உண்மையிலேயே மிகவும் பணிவும் தேவைகளை இறைவன் முன்னால் வைக்கின்ற நிலையும் உருவாகி விட்டால் உடலில் தானாகவே அதன் தாக்கங்கள் வெளிப்படுகின்றன. அவ்வாறே உடலில் ஒரு தனிப்பட்ட தாக்கம் ஏற்படும்போது ஆன்மாவும் அதன் தாக்கத்திற்கு ஆளாகின்றது.

(மல்.்.பூஸாத் தொகுதி 4 பக்கம் 420-421; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

எனவே, இவை இரண்டும் (அதாவது உடலும் ஆன்மாவும்) ஒன்று மற்றொன்று இணைந்திருப்பது அவசியமானதாகும். வெளிப்படையான தொழுகை –யையும் குர்பானியையும் கூட தான் தக்வாவில் முன்னேறுவதற்கும் தனது ஆன்மாவில் சிறந்த நிலையை ஏற்படுத்திக் கொள்வதற்கும் தனது உள்ளத்தையும் தனது ஆன்மாவையும் தூய்மைப் –படுத்துவதற்கும் செய்ய வேண்டும்.

ஒரு சந்தர்ப்பத்தில் தக்வாவின் நிபந்தனைகள் பற்றி குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: இறையச்சமுள்ளவர்கள் தமது வாழ்க்கையை ஏழ்மையின் நிலையில் எளிமையாக கழிக்க வேண்டும் என்பது நிபந்தனையாகும். இது தக்வாவின் ஒரு கிளையாகும். அதன் மூலமாக நாம் ஆகாத கோபத்தை எதிர்த்து நிற்க வேண்டும். பெரும் பெரும் இறைஞானிகள், உண்மையாளர்கள் ஆகியோரின் இறுதி மற்றும் கடினமான இலக்கு கோபத்திலிருந்து தப்பிப்பதாகும். தற்பெருமையும், ஆணவமும் கோபத்தால் உருவாகின்றது. அவ்வாறே சில நேரங்களில் சுயமே கோபப்படுவதும் கூட தற்பெருமை மற்றும் கோபத்தின் விளைவாக இருக்கின்றது. மனிதனுக்கு கோபம் ஏன் வருகின்றது? ஏனென்றால் சில நிலைமைகளில் அவனிடம் தற்பெருமையும் ஆணவமும் காணப்படுகின்றது. மற்றவர்களை அவன் தன்னை விட அற்பமானவர்களாக கருத ஆரம்பிக்கின்றான்.

தன்னை பெரியவனாக அவன் நினைக்கின்றான். பிறரது சிறிய தவறைக் காணும்போது அவனுக்கு கோபம் வந்து விடுகின்றது. எனவேதான் கோபமும் கூட தற்பெருமை மற்றும் ஆணவம் கொள்வதன் காரணமாக உருவாகின்றது.

தொடர்ந்து ஹுஸூர் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: ''தனக்கு மற்றவர்களை விட மனிதன் முன்னுரிமை வழங்கும்போதுதான் கோபம் வருகின்றது.''

எனவே, எவர்கள் விரைவில் கோபமடைந்து சண்டையிடத் தயாராகி விடுகின்றனரோ அவர்களுக்கு இது சிந்திக்க வேண்டிய இடமாக இருக்கின்றது. அந்த கோபம் குடும்பத் தொடர்புகளுடன் தொடர்புடையதாக இருந்தாலும் சரி அல்லது கணவன், மனைவிக்கு இடையில் உள்ள தொடர்புகளில் காணப்பட்டாலும் சரி அல்லது சமுதாயத் தொடர்புகளில் கோபத்தை வெளிப்படுத்தினாலும் சரி ஒவ்வோர் இடத்திலும் அவர்கள் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக தியாகத் திருநாளாக இருக்கும் இந்த பெருநாளில் இதன் பக்கம் குறிப்பாக நாம் கவனம் செலுத்த வேண்டும். அதாவது நாம் கோபப்படுவதை விட்டு விட வேண்டும். நம்மை நாமே தியாகம் செய்தவாறு நமது ஆன்மாவை நாம் சிறந்த நிலையில் வைத்திருக்க வேண்டும்.

தொடர்ந்து ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: எனது ஜமாஅத்திலுள்ளவர்கள் பரஸ்பரம் தங்களுக்கிடையில் ஒருவர் மற்றவரை சிறிதாகக் கருதுவது அல்லது ஒருவர் மற்றவர் மீது ஆணவம் கொள்வது அல்லது ஒருவர் மற்றவரை அற்பமாகப் பார்ப்பது ஆகியவற்றை செய்கின்றாரா என்பது எனக்கு தெரியவில்லை. யார் பெரியவர்? யார் சிறியவர்? என்பதை இறைவன் அறிகின்றான். இது ஒரு வகையில் இழிவாக நடந்து கொள்வ–தாகும். எவரிடம் பிறரை அற்பமாகக் கருதுகின்ற நிலை இருக்கின்றதோ அந்நிலையானது விதையைப் போன்று வளர்ந்து அவரது அழிவிற்கு காரணமாக ஆகி விடலாம் என்ற அச்சம் இருக்கின்றது. சிலர் பெரிய மனிதர்களைச் சந்திக்கும்போது மிகவும் மரியாதையுடன் அவர்களிடம் நடந்து கொள்கின்றனர். ஆனால் ஏழை கூறுவதை பணிவுடன் கேட்பவர்தான் பெரியவராவார். அந்த ஏழையின் உள்ளத்தை அவர் மகிழ்விக்க வேண்டும். அவர் கூறும் விஷயத்திற்கு கண்ணியமளிக்க வேண்டும். அவருக்கு துக்கத்தை ஏற்படுத்துகின்ற வகையில் கோபத்தை வெளிப்படுத்தும் எந்த சொல்லையும் நாவில் கொண்டு வரக் கூடாது.

இறைவன் இவ்வாறு கூறுகின்றான்: ஒருவரையொருவர் (தீய) பட்டப்பெயர் சூட்டி அழைக்காதீர்ககள். ஏனெனில், நம்பிக்கை கொண்ட பின்னர் கெட்ட பெயர் எடுப்பது மிகவும் தீய ஒன்றாகும். பாவமன்னிப்புக் கோராதவர்கள் அநீதியிழைப்பவர்களாவார்கள். (49:12) இவ்வசனத்தில் இறைவன் பரஸ்பரம் உங்களில் ஒருவர் மற்றவரை தீய பெயர்களைக் கொண்டு அழைக்காதீர்கள். நம்பிக்கை கொண்ட பிறகு குழப்பத்தின் கறை படிவது மிகவும் தீய ஒன்றாகும். இது குழப்பவாதிகள் மற்றும் தீயவர்களின் செயலாகும். எந்த நபர் பிறரை கேலி கிண்டல் செய்வது அவரை கோபப்பட வைக்கின்றாரோ அவர் சுயமே இதே போன்ற நிலைமைக்கு ஆளாகதவரை மரணிக்க மாட்டார். உங்கள் சகோதரர்களை அற்பமாகக் கருதாதீர்கள். ஒரே நீரூற்றிலிருந்து நீங்கள் அனைவரும் தண்ணீர் குடிக்கும்போது பிறகு யாருடைய நற்பாக்கியத்தில் அதிகமாக தண்ணீர் குடிப்பது இருக்கின்றது என்பது யாருக்கு தெரியும்? உலகிலுள்ள விதிமுறைகளுக்கேற்ப எவருமே கண்ணியத்திற்குரியவராக ஆக முடியாது. இறைவனது பார்வையில் இறையச்சமுள்ளவரே எல்லாரையும் விட பெரியவராவார். நிச்சயமாக அல்லாஹ்வின் பார்வையில் கண்ணியமிக்கவர் உங்களுள் இறையச்சமிக்கவரே. நிச்சயமாக அல்லாஹ் எல்லாம் அறிந்தவனும் எல்லாம் உணர்ந்தவனுமாவான். (49:14)

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 36; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

உண்மையான இறை ஞானம் பணிவையும் தாழ்மைக் குணத்தையும் கடைபிடிப்பதன் மூலமாகவே கிடைக்கின்றது. அதற்காக இறைவனின் சந்நிதியில் விழுவது அவசியமான–தாகும். அவனிடம் உதவி கேட்பது அவசியமான–தாகும் என்பதை விளக்கியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: ''என்னைப் பொருத்த–வரையில் தூய்மையடைவதற்கு இதுவே சிறந்த வழிமுறையாகும். இதை விட வேறு சிறந்த வழிமுறை கிடைப்பது சாத்தியமற்றதாகும். அதாவது, மனிதன் எவ்வகையிலும் ஆணவமும் பெருமையும் கொள்ளக் கூடாது. அறிவு, குடும்பம் மற்றும் செல்வம் ஆகியவற்றின் அடிப்படையில் ஆணவம் கொள்ளக் கூடாது. பெருமையடிக்கக் கூடாது. அல்லாஹ், ஒருவருக்கு கண்களை வழங்குகின்றபோது இந்த இருள்களிலிருந்து இரட்சிப்பை தர முடிகின்ற ஒவ்வொரு ஒளியும் விண்ணிலிருந்தே (அதாவது இறைவனிடமிருந்து தான்) வருகின்றது என்பதை அவர் கண்டு கொள்வார். வெளிப்படையான கண்கள் மூலமாகவும் நாம் பார்க்கின்றோம். வெளிச்சம் இருக்கும்போதுதான் அந்த கண்களை நாம் பயன்படுத்த முடியும். அந்த வெளிச்சமும் கூட விண்ணிலிருந்தே வருகின்றது. விண்ணிலிருந்து வருகின்ற சூரியனின் ஒளி இல்லாமல், அது வராமல் கண்களால் பார்க்கவும் முடியாது. இவ்வாறே உள்ளங்களிலுள்ள அகத்தின் ஒளியும் வானத்திலிருந்தே வருகின்றது. மனிதனின் தக்வா, ஈமான், இறைவணக்கம், தூய்மை ஆகியவை அனைத்தும் வானத்திலிருந்தே வருகின்றது. மேலும், இது இறைவனின் அருளை சார்ந்திருக்கின்றது. அவன் விரும்பினால் இதை நிலைத்திருக்கும்படி செய்வான். அவன் விரும்பினால் அதை அகற்றி விடுவான்.

அன்னார் கூறுகின்றார்கள்: மனிதன் தனது ஆன்மா அழிக்கப்பட்டதும் ஒன்றுமற்றதாகும் என்று கருதுவதுதான் உண்மையான இறை ஞானமாகும். மேலும் அவன் இறைவனின் சந்நிதியில் விழுந்தவாறு பணிவுடனும் தாழ்மைக் குணத்துடனும் இறைவனின் அருளை வேண்ட வேண்டும். மனயிச்சைககளை எரித்து விடுகின்ற அந்த இறை ஞானத்தின் ஒளியை அவனிடம் கேட்க வேண்டியது அவசியமானதாகும். அது அல்லாஹ்வின் அருளால்தான் கிடைக்கின்றது. அகத்தில் ஓர் ஒளியையும் நன்மைகளை செய்வதற்கான ஆற்றலையும் வெப்பத்தையும் அது உருவாக்குகின்றது. பிறகு அவனது அருளிலிருந்து அவருக்கு பங்கு கிடைத்து விட்டால், ஏதாவது ஒரு வகையில் அவரது உண்மை திறந்து விட்டால் அதில் ஒளி நிரப்பப்பட்டு விட்டால் அதில் அவர் ஆணவமும் பெருமையும் கொள்ளக் கூடாது. மாறாக, பணிவை கடைபிடிப்பதிலும் தாழ்மைக் குணத்திலும் மேலும் அவர் முன்னேற வேண்டும். ஏனென்றால், எந்த அளவு மனிதன் தன்னை ஒன்றுமற்றவனாக கருதுவானோ அந்த அளவு தூய்மையான நிலைமைகளும் ஒளிகளும் இறைவனிடமிருந்து இறங்குகின்றன. அது அவனுக்கு ஒளியையும் ஆற்றலையும் தருகின்றது. மனிதன் இந்த கொள்கையை உடையவனாக இருந்தால் அல்லாஹ்வின் அருளால் அவனது ஒழுக்கத்தின் நிலைமை சிறந்து விளங்கும் என்ற நம்பிக்கை இருக்கின்றது. உலகில் தன்னை ஒரு பொருட்டாக கருதுவதும் கூட ஆணவமாகும். பிறகு மனிதனின் நிலை எவ்வாறு ஆகிவிடுகின்றது என்றால் அவன் மற்றவர்களை சபிக்கின்றான். மேலும், அவர்களை அற்பமாகக் கருதுகின்றான்.

அன்னார் கூறுகின்றார்கள்: நான் இந்த எல்லா விஷயங்களையும் மீண்டும் மீண்டும் எடுத்துக் கூறுவதற்கான காரணம் இறைவன் இந்த ஜமாஅத்தை உருவாக்க விரும்பியதன் காரணமும் இதுவேயாகும். அதாவது உலகில் இருந்து தொலைந்த போய் விட்ட அந்த உண்மையான இறை ஞானத்தையும், இந்த காலத்தில் இல்லாத அந்த உண்மையான தக்வாவையும் தூய்மையையும் மீண்டும் நிலை நாட்டுவதே இந்த ஜமாஅத்தின் நோக்கமாகும். பொதுவாக உலகில் ஆணவம் பரவியிருக்கின்றது. ஆலிம்கள் தமது அறிவு குறித்து பெருமையடிப்பது மற்றும் ஆணவத்தில் சிக்கியுள்ளனர். மார்க்கப் பெரியார்களின் நிலைமையைப் பார்த்தால் அவர்களின் நிலைமையும் இவ்வாறுதான் இருந்து வருகின்றது. தங்களை சீர்திருத்தும் எந்த பணிகளும் நடைபெறவில்லை. அவர்களது குறிக்கோள் உடல் வரை மட்டுமே இருக்கின்றது. இதனால் அவர்களின் முயற்சிகளும் பயிற்சிகளும் கூட வேறு விதமாக இருக்கின்றது. உதாரணமாக திக்ரு அர்ரா போன்றவை அவர்களிடம் இருக்கின்றன. நபித்துவத்தின் நீரூற்றிலிருந்து

அவற்றைப் பற்றி எதுவும் நமக்கு தெரியவில்லை. இன்றைய நாட்களில் பல்வேறு மக்கள் பலவகையான திக்ருகளை உருவாக்கியுள்ளனர். தம்மைத் தாமே அவர்கள் ஆலிம்கள் என்று கூறிக்கொள்கின்றனர். தம்மை அவர்கள் சூஃபிகள் என்றும் கருதுகின்றனர். ஆனால் அவர்கள் எத்தகைய பித்அத்துகளை உருவாக்கி விட்டனர் என்றால் பெருமானார் (ஸல்) அவர்கள் அவ்வாறு செய்ததாக நிரூபணமாகவில்லை என்று அவர்கள் கூறுகின்றார்கள்.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: உள்ளத்தை தூய்மையாக்குவதன் பக்கம் அவர்களுக்கு கவனமில்லை என்பதை நான் பார்க்கின்றேன். வெறுமனே அவர்களது உடல் மட்டுமே எஞ்சி இருக்கின்றது. அதில் ஆன்மீகத்தின் எந்த பெயரும் அடையாளமும் இல்லை. இந்த முயற்சிகளால் உள்ளத்தை தூய்மையாக்க முடியாது. உண்மையான இறை ஞானத்தின் ஒளியையும் அதனால் வழங்க முடியாது. இந்த காலம் இப்போது முற்றிலும் வெறுமையாக இருக்கின்றது. நாம் பின்பற்ற வேண்டிய நபித்துவத்தின் வழிமுறையானது முற்றிலுமாக கைவிடப்பட்டு விட்டது. அவற்றை அவர்கள் மறந்து விட்டனர். இப்போது நபித்துவத்தின் காலம் மீண்டும் வர வேண்டும். தக்வாவும் தூய்மையும் மீண்டும் நிலைநாட்டப்பட வேண்டும் என்று அல்லாஹ் விரும்புகின்றான். அவன் அதனை இந்த ஜமாஅத்தின் மூலமாக நிறைவேற்ற விரும்பியுள்ளான்.

ஜமாஅத் உறுப்பினர்கள் மீது மிகப்பெரும் பொறுப்பு இருக்கின்றது. அவர்களிடம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எதிர்பார்க்கின்ற அந்த தக்வாவை அவர்கள் உருவாக்க வேண்டும்.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: உண்மையான சீர்திருத்தத்தின் பக்கம் கவனம் செலுத்துவது உங்களது கடமையாக இருக்கின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எவ்வாறு சீர்திருத்தத்திற்கான வழிமுறையைக் கூறியுள்ளார்களோ அதையே நாம் பின்பற்றி நடக்க வேண்டும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 7 பக்கம் 276-278. 1985 ஆம் ஆண்டு பதிப்பு. இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

ஜமாஅத் தக்வாவை பேண வேண்டும் என்று போதனை செய்தவாறு ஒரு சந்தர்ப்பத்தில் அன்னார் இவ்வாறு கூறினார்கள்: எனது ஜமாஅத்தை சார்ந்தவர்களாகத் தங்களைக் கருதிக் கொள்ளும் மக்களே! நீங்கள் உண்மையிலேயே இறையச்சத்தின் வழிகளில் காலெடுத்து வைக்கும்போதுதான் வானத்தில் எனது ஜமாஅத்தைச் சார்ந்தவர்களாக கருதப்படுவீர்கள். ஆகவே, நீங்கள் உங்களது ஐவேளை தொழுகைகளை இறைவனைப் பார்ப்பது போன்று பயபக்தியுடன் தொழுது வாருங்கள். மேலும், உங்கள் நோன்புகளை இறைவனுக்காக முழு மனதுடன் நிறைவேற்றுங்கள். ஸக்காத்து கொடுக்கத் தகுதியுள்ள ஒவ்வொருவரும் ஸக்காத் செலுத்துங்கள். எவர் மீது ஹஜ் கடமையாக்கப்பட்டிருக்கின்றதோ அவருக்கு எவ்வித தடையும் இல்லையென்றால் ஹஜ் செய்ய வேண்டும். நன்மைகளை அழகுபடுத்தி நிறைவேற்றுங்கள். தீமைகளை வெறுத்து விட்டு விடுங்கள். தக்வா என்னும் இறையச்சம் இல்லாத எந்த செயலும் இறைவனை அடைய முடியாது என்பதை நிச்சயமாக நினைவில் வையுங்கள். ஒவ்வொரு நன்மையின் ஆணிவேரும் தக்வா ஆகும். ஆகவே எச்செயலில் இந்த வேர் வீணாவதில்லையோ அச்செயல் நிச்சயம் வீண் போவதில்லை.

(கிஷ்தி நூஹ் ரூஹானி கஸாயின் தொகுதி 19 பக்கம் 15)

நபிமொழியிலும் இவ்வாறு வருகின்றது: இன்னமல் அஃமாலு பின்னிய்யாத்தி – அதாவது, எண்ணங்களின் அடிப்படையிலேயே செயல் அமைகின்றது.

(சஹீஹ் புகாரி கிதாபுல் வஹி பாபு கய்.்.ப் கானல் வஹீ இலா ரசூலில்லாஹி ஹதீஸ் எண் 1)

நல்லெண்ணத்துடன் ஒரு செயலை செய்தால் அல்லாஹ் அதற்கு நற்கூலி வழங்குகின்றான். தீய எண்ணத்துடன் அதனை செய்தால் அதற்கான தண்டனை கிடைக்கும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: சென்ற கால நம்பிக்கையாளர்களுக்கு சோதனைகள் ஏற்பட்டது போன்று நீங்களும் பல வகையான துக்கம் துயரங்களால் சோதிக்கப்படுவதும் அவசியமான –தாகும். ஆகவே நீங்கள் தடுமாற்றம் அடையாதிருக்க எச்சரிக்கையாக இருங்கள். வானத்துடன் உங்களுக்கு உறுதியான தொடர்பு இருக்குமானால், பூமி உங்களுக்கு எவ்வித தீங்கும் இழைக்க முடியாது. எப்போதாயினும் உங்களுக்கு ஏதேனும் நஷ்டம் உண்டாகுமெனில் அது உங்கள் கையால் உண்டான நஷ்டமே அல்லாமல் உங்கள் பகைவர்களின் கைகளால் உண்டானது அல்ல. இப்பூமியில் உங்களது கௌரவம் அனைத்தையும் இழக்க நேரிட்டாலும் இறைவன் உங்களுக்கு என்றென்றும் மறைந்து போகாத கௌரவத்தையும் மதிப்பையும் நிச்சயமாக வானத்தில் அளிப்பான். ஆகவே, நீங்கள் அவனை ஒருபோதும் விட்டு விடாதீர்கள்.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: கவனியுங்கள்! உங்களுடைய இறைவன் உண்மையிலேயே இருக்கிறான் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். அனைவரும் அவனது படைப்புகளாகயிருப்பினும் எவர் இறைவனை தேர்ந்தெடுக்கின்றாரோ அவரையே இறைவனும் தேர்ந்தெடுத்துக் கொள்கின்றான். எவர் அவனிடம் செல்வாரோ அவனும் அவரிடம் வந்து விடுகின்றான். எவர் அவனை கண்ணியப்படுத்துகின்றாரோ அவனும் அவரை கண்ணியப்டுத்துகிறான்.

(கிஷ்தி நூஹ் ரூஹானி கஸாயீன் தொகுதி 19 பக்கம் 15)

எனவே, நீங்கள் அல்லாஹ்வுடன் தொடர்பு வைப்பீர்களென்றால் அல்லாஹ் உங்களுக்கு கண்ணியத்தையும் வழங்குவான். உங்களிடம் வருவான். உங்களது துஆக்களையும் ஏற்றுக் கொள்வான் என்றே ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள். இந்த நிலைமையைத்தான் நம்மில் ஒவ்வொருவரும் பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அதன் மூலமாக அல்லாஹ்வின் பாதுகாப்பின் கீழ் வருபவர்களாக நாம் ஆக வேண்டும். வானத்துடன் உறுதியான தொடர்பை வைத்திருப்பவர்களாகவும் நாம் இருக்க வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தனக்கு வந்த ஓர் இல்ஹாம் தொடர்பாக மிகவும் வலுவாக ஜமாஅத்திற்கு மிகவும் வேதனையுடன் போதனை செய்தவாறும் தக்வாவின் தரத்தை உயர்த்துவது தொடர்பாக கவனமூட்டியவாறும் இவ்வாறு கூறுகின்றார்கள்: நேற்று (அதாவது 22 ஜூன் 1899 –ல்) பலமுறை இறைவன் தரப்பிலிருந்து இந்த இல்ஹாம் வந்தது. அதாவது நீங்கள் இறையச்சமுடையவர்களாக ஆகி விடுங்கள். தக்வாவின் நுட்பமான வழிகளில் செல்லுங்கள். அப்போது இறைவன் உங்களுடன் இருப்பான் என்று அதில் கூறப்பட்டது.

அன்னார் கூறுகின்றார்கள்: இதனால் எனது உள்ளத்தில் பெரும் வேதனை உருவாகி இருக்கின்றது. அதாவது நமது ஜமாஅத் உண்மையான இறையச்சத்தையும் தூய்மையையும் கடைபிடிப்பதற்கு நான் என்ன செய்ய வேண்டும் என்ற பெரும் வேதனை எனது உள்ளத்தில் உருவாகி விடுகின்றது.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இதற்காக நான் எந்த அளவு துஆ செய்கின்றேன் என்றால் துஆ செய்து செய்து என்னிடத்தில் பலவீனம் மிகைத்து விடுகின்றது. சில நேரதத்தில் மயக்கம் மற்றும் அழிந்துபோகும் வரையிலுள்ள நிலைமை ஏற்பட்டு விடுகின்றது. எதுவரை ஒரு ஜமாஅத் இறைவனின் பார்வையில் இறையச்சம் உள்ள ஜமாஅத்தாக ஆகுவதில்லையோ அதுவரை இறைவனின் உதவி அதற்கு கிடைக்காது.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 303. 1985 ஆம் ஆண்டு பதிப்பு. இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

அல்லாஹ் நமக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வேதனையைப் புரிந்தவாறு உண்மையான இறையச்சத்தை உள்ளத்தில் உருவாக்குவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக. நமது இறைவணக்கங்களும் நமது தியாகங்களும் முழுக்க முழுக்க அல்லாஹ்விற்காக மட்டும் இருக்கட்டுமாக. அல்லாஹ் பற்றிய உண்மையான ஞானத்தை பெறக்கூடியவர்களாக நாம் இருப்போமாக. அல்லாஹ்வின் நேசத்திற்குரிய உரிமையை செலுத்துபவர்களாக நாம் இருப்போமாக. அல்லாஹ் இதற்கான நல்வாய்ப்பை உங்களுக்கு வழங்குவானாக.

இப்போது நாம் துஆ செய்வோம். துஆக்களில் இறை வழியில் கைதாகி இருப்பவர்களை நினைவில் வையுங்கள். இறைவனுக்காக கைதாகி இருக்கும் நிலையில் தமது வாழ்க்கையை அவர்கள் கழித்து வருகின்றனர். உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கியதன் காரணமாக அவர்களுக்கு இந்த தியாகங்களை கடந்து செல்ல வேண்டியது இருக்கின்றது. அல்லாஹ் அவர்கள் விடுதலையடைவதற்கான ஏற்பாட்டை விரைவாக செய்வானாக. ஜமாஅத்தின் காரணமாக எவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டிருக்கின்றதோ அவர்களை அல்லாஹ் குற்றமற்றவர்களாக அவற்றிலிருந்து அவர்களை விடுவிப்பானாக. பாகிஸ்தானிலும் அல்ஜீரியாவிலும் உலகில் அஹ்மதிய்யத்தின் காரணமாக ஏதாவது ஒரு வகையிலான துன்பத்தைக் கடந்து சென்று கொண்டிருக்கின்ற ஒவ்வொரு நாட்டையும் சார்ந்த அத்தகைய அஹ்மதிகளுக்காவும் துஆ செய்யுங்கள். ஜமாஅத்தின் பொதுவான முன்னேற்றத்திற்காகவும் தக்வாவின் தரம் உயர்வதற்காகவும் அதிகமாக துஆ செய்யுங்கள். முஸ்லிம் உம்மத்திற்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களுக்கு அறிவையும் புரியும் திறனையும் வழங்குவானாக. தக்வாவின் உண்மையான பொருள்களையும் ஹஜ் மற்றும் குர்பானியின் உண்மையான கருத்தையும் புரிந்தவாறு காலத்தின் இமாமிடம் பைஅத் செய்தவாறு அவர்கள் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறக் கூடியவர்களாக அவர்கள் ஆகுவார்களாக இரண்டாவது குத்பாவிற்கு பிறகு துஆ இருக்கும்.

இரண்டாவது குத்பாவிற்கு பிறகு ஹுஸூர் அவர்கள் துஆ செய்தார்கள். அதற்குப் பிறகு இவ்வாறு கூறினார்கள்: அனைவருக்கும் ஈத் முபாரக். அஸ்ஸலாமு அலைக்கும். வரஹ்மதுல்லாஹ்.

(இலண்டனிலுள்ள அல் ஃபஸ்ல் இன்டர்நேஷனல் தமது 29 டிசம்பர் 2017 வெளியீட்டில் இந்த பெருநாள் குத்பாவை வெளியிட்டிருக்கின்றது. அவர்களுக்கு நாம் நன்றி தெரிவித்து கொள்கின்றோம்.)

★ ★ ★ ★ ★

# தஹ்ரீகே ஜதீது திட்டம் இறைவனின் திட்டமாகும்

**ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

“தஹ்ரீகே ஜதீது திட்டத்தை என் தரப்பிலிருந்து நான் கூறியுள்ளதாக நீங்கள் கருத வேண்டாம். ஒருபோதும் அவ்வாறு அல்ல. மாறாக, அதன் ஒவ்வொரு சொல்லையும் திருக்குர்ஆனிலிருந்து என்னால் நிரூபிக்க முடியும். அதன் ஒவ்வொரு கட்டளையையும் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களின் கட்டளைகளிலிருந்து என்னால் காட்ட முடியும். ஆனால் சிந்திக்கின்ற மூளையும் நம்பிக்கை கொள்கின்ற உள்ளமும் தேவைப்படுகின்றது. எனவே, எதை நான் கூறினேனோ அதை நான் என் தரப்பிலிருந்து கூறியிருப்பதாக நீங்கள் நினைக்க வேண்டாம். மாறாக, இது எவனது கையில் உங்கள் உயிர் இருக்கின்றதோ அவனது கட்டளையாகும். நான் மரணித்து விட்டாலும் கூட அந்த இறைவன் வேறு ஒருவர் மூலமாக இதைத்தான் கூற வைப்பான். அவர் மரணித்த பிறகு இன்னொருவர் மூலமாக பேணி நடக்கும்படி செய்யாத வரை இவ்வாறு கூற வைப்பதை அவன் விட்டு விட மாட்டான்.”

(ஜுமுஆ குத்பா 13 டிசம்பர் 1935)

**ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் தஹ்ரீகே ஜதீது திட்டம் தொடர்பாக இவ்வாறு கூறுகின்றார்கள்:**

“நான் இந்த திட்டத்தை ஆயத்தம் செய்வதற்காக ஒருபோதும் சிந்தனை செய்யவில்லை. இத்திட்டத்தைப் பற்றி பல மணி நேரங்கள் வரை நான் சிந்திக்கவில்லை. இறைவனே எனது உள்ளத்தில் இந்த திட்டத்தை உருவாக்கினான். அதாவது இதைப் பற்றி குத்பாக்களில் நான் எவற்றையெல்லாம் கூறினேனோ அதை நான் கூறவில்லை. மாறாக, அல்லாஹ் எனது நாவில் இந்த திட்டத்தைப் பற்றி கூறும்படி செய்தான். ஏனென்றால், ஒரு நிமிடம் கூட நான் என்ன சொல்ல வேண்டும் என்பதை பற்றி நான் சிந்திக்கவில்லை. அல்லாஹ் எனது நாவில் இந்த திட்டத்தை தானாகவே கூறும்படி செய்தான். அப்போது நான் பேசவில்லை. மாறாக, எனது நாவில் இறைவன் பேசிக் கொண்டிருக்கின்றான் என்று நான் கருதினேன்.”

(ஜுமுஆ குத்பா 21 அக்டோபர் 1936)

**ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இந்த பொருள் தியாகத்தி உயர்வான தரத்தைப் பற்றி விளக்கியவாறு இவ்வாறு கூறினார்கள்:**

“ஒரு நபர் தனது ஒரு மாத வருமானத்தின் பாதியை சந்தாவாக கொடுத்தால், உதாரணமாக அவருக்கு மாதம் 100 ரூபாய் வருமானமாக வந்தது என்றால் அவர் 50 ரூழுாயை வாக்குறுதியாக எழுத வேண்டும. அவ்வாறு அவர் எழுதினால் அவர் நல்ல தியாகம் செய்ததாக கருதப்படும். அவர் தனது ஒரு மாத வருமானத்தை முழுவதுமாக அதாவது 100 ரூபாயை வாக்குறுதியாக எழுதினால் அவர் சிரமப்பட்டு துன்பத்தை சகித்தவாறு தியாகம் செய்ததாக கருதப்படும்.”

(ஜுமுஆ குத்பா 4 டிசம்பர் 1953)

**ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

“எவர்கள் தமது வருமானத்திற்கேற்ப சந்தாவிற்காக வாக்குறுதியை எழுதவில்லையோ அவர்களுக்கும் நான் கவனமூட்டுகின்றேன். அதாவது அவர் தமது வருமானத்திற்கேற்ப சந்தாவிற்கான வாக்குறுதி வழங்க வேண்டும். எப்போதும் தனது தகுதிக்கு குறைவாக வாக்குறுதி வழங்குபவர் சந்தா கொடுக்காதவர் ஆவார். மனிதன் முழுமையான முறையில் தியாகம் செய்யாமல் இருக்கும்போது இறைவனின் மலக்குகளும் வரிடம் வலிமையையும் சக்தியையும் உருவாக்க மாட்டார்கள்.”

(ஜுமுஆ குத்பா 4 டிசம்பர் 1953)

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
RAFEEQ AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 3 Thursday 10 May 2018 Issue No. 19

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

காணப்படும் சாந்தியும் சமாதானமும் மற்ற எந்தக் கூட்டத்திலும் இருக்காது. மிகவும் குறைவாகவும் அரிதாகவும் ஏதும் உண்டாவதைத் தவிர பிளேக்கால் அழிவை உண்டு பண்ணக் கூடிய ஆபத்து காதியானில் தோன்றாது.

ஆனால், அந்தோ பரிதாபம்! இந்த மக்கள் நேர்மையான உள்ளம் படைத்தவர்களாகவும் இறைவனுக்கு அஞ்சக் கூடியவர்களாகவும் இருந்தால் இவர்கள் அனைவரும் இந்த அழிவிலிருந்து முற்றிலும் காப்பாற்றப்பட்டிருப்பார்கள். ஏனெனில், மார்க்க வேறுபாட்டின் காரணத்தால் உலகில் எவர் மீதும் தண்டனை இறங்குவதில்லை. இதற்கான தண்டனை நியாயத் தீர்ப்பு நாளில்தான் கிடைக்கும். உலகில் கெடுதிகள், குழப்பங்கள், அக்கிரமங்கள் மற்றும் அதிகமாக இழைக்கப்படும் பாவங்களினால் மட்டுமே தண்டனை வருகிறது. வாக்களிக்கப்பட்ட மஸீஹின் காலத்தில் பிளேக் உண்டாகும் என்று திருக்குர்ஆனிலும் ஏன் தவ்ராத்தில் சில நூல்களிலும் கூட இச்செய்தி இடம் பெற்றிருக்கிறது என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

இதைத் தவிர ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களும் பைபிளின் புதிய ஏற்பாட்டில் இந்த விஷயத்தைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்கள். ஆகவே நபிமார்களின் முன்னறிவிப்புகள் நிறைவேறாமல் போகாது. மேலும் இந்த இறை அடையாளத்தை எதிரிகள் வேறு பக்கம் சம்பந்தப்படுத்தக் கூடாது என்பதற்காக இந்தத் தெய்வீக வாக்குறுதிகளுக்கு எதிராக நாம் மனித திட்டங்களை விட்டு விலக வேண்டியது கட்டாயமாகும் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். எனினும், இதனோடு இறைவன் தனது வசனத்தின் மூலம் வேறு ஏதாவது திட்டத்தை அவனே புரிய வைத்தால் அல்லது ஏதாவது மருந்தை தெரிவித்தால் அந்தத் திட்டத்தாலோ அல்லது மருந்தாலோ அவ்வடையாளத்தில் எவ்வித பாதிப்பும் உண்டாகாது. ஏனெனில் அவை இந்த அடையாளத்தை இறக்கிய இறைவன் புறமிருந்து வந்தவையாகும். நமது ஜமாஅத்தில் அரிதாக யாராவது பிளேக்கின் காரணமாக மரணித்தால் இந்த அடையாளத்தின் மதிப்பும் உயர் நிலையும் பாதிக்கப்படும் என்ற எண்ணம் யாருக்கும் தோன்றி விட வேண்டாம்.

ஏனெனில், எவர்கள் வாளைக் கொண்டு நூற்றுக்கணக்கான மக்களை கொன்று குவித்தார்களோ அவர்கள் வாளைக் கொண்டு கொல்லப்பட வேண்டும் என்ற முற்காலங்களில் மூஸா, யோசே ஆகியோருக்கும் இறுதியில் நமது திரு நபி (ஸல்) அவர்களுக்கும் கட்டளை உண்டானது. இது நபிமார்களின் புறமிருந்து வந்த ஓர் அடையாளமாகும். இதன் பின் மாபெரும் வெற்றி கிடைத்தது. ஆனால் மிகவும் குறைந்த அளவில் குற்றவாளிகளுக்கு எதிராக உண்மையாளர்களும் அவர்களது வாளால் கொல்லப்பட்டனர்.

ஆகவே, இந்த குறைந்த நஷ்டத்தால் அடையாளத்தில் சிறிதளவும் பாதிப்பு உண்டானதில்லை. இவ்வாறே அரிதாக நமது ஜமாஅத்திலும் சிலருக்கு முன்பு குறிப்பிட்ட காரணங்களினால் பிளேக் நோய் தோன்றினால் அப்படிப்பட்ட பிளேக்கினால் இறைவனது இந்த அடையாத்திலும் எவ்வித பாதிப்பும் உண்டாகாது. (இது மாபெரும்) சிறப்புக்குரிய அடையாளமில்லையா ?

நான் திரும்பத் திரும்ப கூறுகிறேன். உண்மையைத் தேடக்கூடிய ஒவ்வொருவருக்கும் எவ்வித சந்தேகமும் ஏற்படாதவாறு இந்த முன்னறிவிப்பை இறைவன் வெளிப்படுத்திக் காட்டுவான். இறைவன் அற்புதமான நிலையில் இந்த ஜமாஅத்தோடு தொடர்பு கொண்டுள்ளான் என்பதை அவர்கள் புரிந்து கொள்வர். மேலும், இந்த இறை அடையாளத்தின் விளைவாக பிளேக் மூலமாக இந்த ஜமாஅத் மிகவும் வளர்ச்சி பெறும். அற்புதமான முறையில் அது முன்னேற்றம் அடையும். இந்த முன்னேற்றம் வியப்புடன் பார்க்கப்படும்.

இந்த முன்னறிவிப்பின்படி இறைவன் இந்த ஜமாஅத்திற்கும் மற்ற ஜமாஅத்துக்களுக்குமிடையில் எவ்வித வேறுபாட்டையும் காட்டாமலிருந்தால் நான் 'நூஸூலுல் மஸீஹ்' என்ற நூலில் குறிப்பிட்டிருப்பதைப் போன்று ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தோல்வியடைந்து கொண்டே செல்கின்ற எதிரிகளுக்கு என்னை பொய்யன் என்று கூறும் உரிமை உண்டு. இதுவரை அவர்கள் என்னை பொய்யன் என்று கூறியதில் இறைவனது சாபத்தையே வாங்கியுள்ளனர்.

உதாரணமாக, எனது முன்னறிவிப்பின்படி (அப்துல்லாஹ்) ஆத்தம் பதினைந்து மாதங்களுக்குள் மரணிக்கவில்லையே என்று திரும்பத் திரும்ப கூச்சல் போட்டனர். ஆனால், அவர் உண்மையின் பக்கம் திரும்பி விட்டால் பதினைந்து மாதங்களுக்குள் மரணிக்க மாட்டார் என்று முன்னறிவிப்பு தெளிவான சொற்களில் கூறப்பட்டிருந்தது. அவ்வாறே அவர் விவாத மாநாட்டில் எழுபது பிரமுகர்களுக்கு முன் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களை '*தஜ்ஜால்*' என்று கூறுவதிலிருந்து பின்வாங்கினார். அதுமட்டுமல்லாமல் அவர் பதினைந்து மாதங்கள் வரை மௌனம், அச்சம் ஆகியவற்றின் மூலமாக தனது பின்வாங்குதலை நிரூபித்துக் காட்டினார். அவர் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களை '*தஜ்ஜால்*' என்று கூறி வந்ததே முன்னறிவிப்பின் அடிப்படை ஆகும். ஆகவே அவர் பின்வாங்கிக் கொண்டதன் காரணமாக அவர் அடைந்த பலன் எல்லாம் அவர் பதினைந்து மாதங்களுக்குப் பின்னர் மரணமடைந்தது தான். ஆயினும் மரணமடைந்து விட்டார். இவ்வாறு நடப்பதற்குக் காரணம் இரு பிரிவினரில் எவர் தமது கொள்கையில் பொய்யராக இருப்பாரோ அவர் முதலில் மரணம் அடைவார் என்று முன்னறிவிப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது. இதன்படி அவர் என்னை விட முன்பாக மரணமடைந்தார்.

இவ்வாறே இறைவன் எனக்கு அறிவித்துள்ள மறைவான விஷயங்கள் எல்லாம் அவற்றிக்குரிய நேரங்களில் நிறைவேறின. அவை பத்தாயிரத்திற்கும் குறைந்தவை அல்ல. ஆனால் எடுத்துக்காட்டாக தற்போது அச்சாகிக் கொண்டிருக்கும் 'நுஸூலுல் மஸீஹ்' என்னும் நூலில் நூற்றி ஐம்பது முன்னறிவிப்புகள் சான்றுகளுடனும் சாட்சிகளுடனும் எழுதப்பட்டுள்ளன.

**(கிஷ்தி நூஹ் ரூஹானி கஸாயீன் தொகுதி 19 பக்கம் 3)**

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad